குஹபாதமே துணை.

சிவஞான தீபம்

திருத்தேவையெனும் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த

பாம்பன்:

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத

வைதிக சைவ சித்தாந்த ஞானபானு

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

Second Edition—1000 Copies.

திருவல்லிக்கேணி: பிரபலசோதிடரும்,

சுவாமிகளுடைய சீடர்களுளொருவருமான

சுப்பிரமணிய தாசரெனும் பெயரிய

சின்னசுவாமிப்பிள்ளையவர்களால்

சென்னை: காந்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1922.

இதன் விலை அணா—8

இயல் அட்டவணை

தொன்றுதொட்டுப் பெரிதும் வழங்கிவருவது சடக்கரமே யாம். இம்மந்திரத்தைத் ஒன்பதாவது இயலிலே காட்டிய வாறு நமோர்த்த மாகவே செபித்துப் பெரும்பேறு பெற லாம்; ஐயமின்று. சகஸ்ர நாமார்ச்சனை, அட்டோத்தர சத நாமார்ச்சனை செய்துத் தேவாதார், சண்முகர்த்தி மன் திரங்கொண் டருச்சிக்கலாம்.

இவ்வொரு பிறவியிற்றானே வீடுபேறு விரும்புநரெல் லாம், இவ்வியற்கட் கூறப்பட்ட 'பூமிசுத்தி' முதலியவை களையும் இவற்றின்று வேறாய் இரகசியமா யுள்ளவைகளை யும் மஹாதேஜோமண்டலத்தாருள் உபதேசிக்க அதி காரம் பெற்றாரிடத் தீக்ஷையாகப் பெற்றும், செய்முறை களைக் கேட்டும் அனுட்டிக்கலாம். பலபல புத்தகங்களுட் பலபல கிரியானுட்டானங்கள் கூறப்பட்டன. அவற்றை யெல்லாஞ் செய்யத் துணிந்தக்கால் ஒரு நாளெனப்படும் அறுபது நாழிகையுமே போதாமையாகும். ஆகவே முக் கியமான செப தியானங்களும் பல்காலுந் தவறாதும் [illegible] அனுட்டிப்புக்களை [illegible]. பத்தி விக்கினமும், முத்தி விக்கினமுமான பலதெய்வ வழிபாடுகள் மஹாதேஜோ மண்டலத்தார்க் குடம்பாடில்லை யாதலின் அவ்வித கிரியானுட்டானங்களும் இதற்குக் கூறப்படவில்லை. ஸ்ரீ. குமாரசம்பந்த ஆதித் திருவழிபாடு போக்க ஒன்பதாவது இயலிலேயே கூறி யாயிற்று.

ஆசிரியன், நீங்காகாலத்தில், இறைவன் சம்பந்தர் ற்று ஒரு நற்பெரும் பெயரை மாணவனுக்கிட்டு வாழ்த் திருப்படச் செய்க.

பெண்கள், தங்கள் பூப்புக் காலத்திலும் ஸ்ரீ சடக்கர த்தை மனதிலே சிந்தித்துக்கொண் டிருக்கலாம். மேலு

முதலிய புன்கணுறினை நீக்கிட மில்லாதார், சீர்விட்டிர் குலமுடையார் திருநீற்றினைச் 'சிவசிவ' என்று நிலையிலி ருநிலையும், நெற்றி கைகள் மார்பு முழுக்கென்று முழுவும் புள்ளிற் பூசுதலையுஞ் செய்து ஸ்ரீ சடக்கரத்தைச் செபித்துக்கொண்டும் குமாரபிரான் திருவடியைத் தியானித்துக்கொண்டும் காலத்தைக் கழிக்கலாம்.

வா ழ் த் து.

கலிவிருத்தம்.

அருணை யம்பதிப் போ தூயயோர்
கருணை காட்டிய கந்த னேக்கிறுன்
இருணை வாயிறச் செய்யக் கூறுமிந்
திருணன் கோர்ந்தலற வாழும் வாழ்கவே.

சிவஞானதீப முற்றிற்று.

குமாரகுருபரன் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

ரீராலும் பொறிக்கப்பட்ட புத்தகங்களுள், அவைகள் புகற்கு ஒருசார்ச் சுயநலமென்னும் ஏதுவுண்டென்பதை யுணர்திற முடையாரே யெமது நடுவுநிலைத் துணிவையு முணர்வர்.

இந்நூலுழை யறிவுறக்கப்பட்டனவே யன்றி, வேறு பலதிறங்களு முணர விழைவோர், எம்முடைய பனுவல்கள் பலவற்றுள்ளும் வடமொழி தென்மொழி மறைமுதலிய பிரபலப் பிரமாணங்கள் பலவற்றையு மேற்கோளாகக் கொண்டு பெருநூலாக விளங்குகின்ற திருப்பா என்னு நூலையும், அதனுரைகளையும், தகராலயரகசியம் பரிபூரணானந்தபோதம் என்னு நூல்களையும், அவற்றினுரைகளையும் படித்தல் கடப்பாடாம்.

ஸ்ரீ ப்ரஹ்மண்யோம்.

கலியுகம் ௫௦௨௩-ற் சாலிவாகன சகாத்தம்
௧௮௪௩-ல் துர்மதி௵ கார்த்திகைமீ ௮௳.

புதுப்பாக்கமென்னுங்
குமாரபுரம், சென்னை.
23 - 11 - 1921.

இங்ஙனம்:
குமரகுருதாசசுவாமிகள்;
பாம்பன்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௯௯		காணப்படடமையி னுமேல தான்	காணப்பட்டமையி னுமேல்தான்
௭௩.	௨௧, ௨௨	உழுக்கயிழ் நீர்	உழுக்கயிழுனைவை நீர்

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

இந்நூலாசிரியருக்கு இளமையிலே திராவிடம்
பயிற்றுவித்தவரும், பாம்பன் : தமிழ்ப்பாடசாலை
உபாத்தியாயரா யிருந்தவருமாகிய

ஸ்ரீ ல ஸ்ரீ

க. மு. முனியாண்டியாபிள்ளையவர்கள்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆழிசூ ழுலகத்தி லாயகலை வழியின்றி
யாயுகல் லறிவுமின்றி
அகிலகனி சக்கரந் தெளிவுமோர் றுய்யவு
மாணடிக் காளாகியுட்
பாழிலா தின்னன்பர் பத்திவழி முற்றவும்
பண்ணவர்கள் சொற்றவாறே
பகருமுறை யாவினிய கனிகண்டு சீனியின்
பண்பெலா மொன்றுமுதமாய்த்
காழிதனி லிமெத்தி னுடையும்வெண் டயிரோசை
சஞ்சல விகாசமெலாய்க்

சிறப்புப்பாயிரம்.

தள்ளவரு சிவஞான தீபமெனு மொண்பெயர்
தனைப்பெற் றிலங்கு நூலை
வாழினிய சற்சனன் மாவீரக விற்பனன்
மதிகொ•ணப் பாவுநிபுணன்
வசனரூ பத்தினில் வகுத்தனன் குமரகுரு
மாவருட் டகைமைகொண்டே (௧

பொன்னேறு மேனியில் வெண்ணீ றிலங்கவும்
பொங்குகுளிர் கங்கைவிதுவார்
புரிசடையி லேப்பினைந் திட்டவெழி லிலவவும்
பொதுநடஞ் செய்தபரமன்
முன்னேறு கருணைகொண் டினியகவி மழைகொடு
முழுக்கவுற் காட்டியென்று
முதுமறைநக ளித்தரும் புகழ்பரப் பிரமகுரு
முருகவே டன்னையென் றூர்
தன்றோ ரகத்தூழி யிருந்திப் படிக்கருட்
டன்மைமிக வுற்றபொறையா
தகவுடைக் குமரகுரு தாசனெனு நற்பெயர்
தனைக்கொண்டின் கிபரத் தும்
முன்றோ ரதிர்த்தநெறி வழுவாம லுட்பொருண்மை
முழுவது முணர்த்துலகினர்
முத்திநிலை கூடிடச் சிவஞான தீபநூல்
முற்றுற மொழிந்தனரரோ. (௨)

அப்பாவு இஃது இந்நூலாசிரியர்க்குத் தந்தை தாயரா லிட்டப்பட்ட பிள்ளைத் திருப்பெயர்.

உ

சிவமயம்.

குஹபரப்ரஹ்மணே நம:

திருச்சிற்றம்பலம்.

சிவஞானதீபம்

காப்பு.

குறள்வெண்செந்துறை.

பொன்விசும் பீந்திரன் புதல்வியை வேட்டோன்
மன்னுடம் பிடியமென்றெண் மலரடி தொழுவாம். (௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐயமா வில்லா வேத வையறு யமல வோத்தின்
மெய்யுறு யாதி மூல விந்துவாய் நாத மாய்நற்
றெய்வமாய் விளங்கு மாறு செவ்வியோங் குகனை யைந்து
கையனோர்க் கிளைய கந்தக் கடவுளைக் கருத்தில் வைப்பாம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொருமைநிசம் புண்ணியங்கள் விரதம் யாகம்
பொருந்தினார்க்கும் வருந்தினார்க்கும் போக யோகம்
திறவுநிலை யுறுபவர்க்கு நீதி ஞான
விளம்பவர்க்கு மருணிலைக்கு வேய மாகி

இறைதிபவ சம்பலைக ளௌவையு நாறி
 யென்னுளத்தி றுணையுடன் விளங்கா நிற்கும்
அறுமுகவ சிவசாமி யென்றன் றீக்ஷ
 னவனிறைவ னுபயவடி யகத்துள் வைப்பேன். (௫)

பாயிரம்.

நூற்பயன்.

பவமான கடல்கடக்க முயலா நிங்கே
 பசைத்தளைத்தே யுழலுகின்ற கலுடச் சீவர்
அவமான விருண்மலநக் கிடக்குங் கன்மை
 யறிந்துய்வா னவ்விருளை யகற்று நிற்குஞ்
சிவஞான தீபிகையைப் படிப்போர் கேட்டோர்
 செப்பினவர் சிந்தைதனிற் பதிப்போர் மேலாந்
தவமான தென்பெல்லா முடிப்போ ராவர்
 சண்முகவே ளருளினிது சாற்றி னேனே (௧)

ஆக்கியோன் பெயர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

ஈறாகி வாரிதரு மேனூறாவை யமலே
 யென்றுமுன பரனளித்த
யாறுதல் கொளாதசன் னுண்மறையி னுட்படாய
 மருவும்ப திட்டகமலில்

---

* இவ்விருத்தத்தின் அடிகளிலுள்ள ஈற்றுச் சீர்களிற் இரண்டிரண்டை மாச்சீர்களாகப் பிரிப்போர், எழுசீர் விருத்தமெனவுங் கூறுப. யாப்பிலக்கிய நூலாகவுமுள்ள இலக்கணத் திரட்டின் ௨-ஆங் கண்டத்திற் காண்க.

ஊறுமதி சாரமதை யுண்டுமுத லோர்களு
முரைத்தவழி யேநுழைந்து
ஊட்டினவ ளிந்நூலை யுலகுணர்த் துய்யவே
குமரகுரு தாசன்மாதோ. (௨)

பாயிர முற்றிற்று.

ஆகத் திருச்செய்யுள்

நூல்

முதலாவது

பதிபசுபாசவியல்

வசனம்.

சருவ அண்ட பிண்ட சராசரங்கட்கும் ஆதி பிதாவாய் வயங்கும் ஈசனொருவன் என்றும் நித்தியனாயுளான். அவன் அநாதியெனப்படுவன்: பரிசுத்தமுடையவன்; பரிசுத்தஞானமுடையவன்: வேதாகமாதி நூல்களாற் றுதிக்கப்பட்டவன்: சமான ரகிதன். சத்து, சித்து, ஆனந்த மென்று மூன்றையு மொருங்கே பொருந்தி நாம ரூப பேதங்களாயுள்ள சமஸ்த சராசரங்களிலுஞ் சச்சிதானந்த சொரூபமென நிறைந்தபொருளு மவனே. அவனே பரம சிவம் என்னும் பரமான்மா; பிரமம் அவனே பதி. அவனே குகன்.

சருவ புவனங்கட்கும் அவன் ஒரேதெய்வமாயுளனென்பதற்கும், ஒரு ஞானியினுடைய அவாவுண்டியிற் சகலசராசரமுமடையச் சேர்தியென்றே தோன்றுதலும்.

அவசியமான நிக்கிரக அனுக்கிரகாதி அற்புதங்களை அந்த ஞானியகத்து நிகழ்தலும், இவைகள் அந்த ஞானி போல்வார்க்கெல்லாம் விகற்பின்றி எய்தலுஞ் சக்கவதுக்களாம்.

ஆன்மாக்க ளணர்த்தம் : அவை, பசுவெனனுமொரு சொல்லிலடங்கும். ஆன்மா, பாசத்திற் கட்டுண்டமையாற் பசுவெனப்பட்டது. அதற்கே— அகர்த்தா, அணு, சீவான்மா, சுதந்திரகனன், கிஞ்சிஞ்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான், சேதனன், ஊதன், இயமானன், உயிர், ஆவி, புத்தி, பிராணன், சதசத்து, புற்கலன், தேகி யென்னும் பெயர்களுளவென்று நூல்க ளுவலும். இச்சீவான்மா, அநாதி நித்தியப்பொருளென்று மவை கூறும்.

மேலே சொன்ன அநாதி நித்திய பரமான்மா வென்னுமொரு சூரியனுடைய விம்பமே உயிர்களி னுள்ளிடங்களென்னுங் கடசலங்கடோறுந் தோன்றுகிற பிரதி விம்பங்களாகும். அந்த விம்பத்தைத் அந்தரியாமி யென்னலாம். அது, தெளிவான சலத்திலேயே தெளிவாகக் காணப்படுமாகலின் அந்தகார அஞ்ஞான ஆன்மா அதனைத் தரிசியாது; ஞானவிழியான்மா தரிசிக்கும். அந்தரியாமிக்கு, அக்கடமே தூலசரீரமும், அச்சலமே சூக்கும சரீரமுமாம். சூரியவிம்பந் தோன்றுகின்ற கடசலங்களு மொன்று கசுமாலமாயின், எல்லாக் கடசலங்களு மங்ஙனமாதலில்லை. அவ்வாறே, ஓருயிர்க்குள்ள சுக துக்கங்கள் ஓருயிர்க்கில்லை. எல்லாக் கடசலங்களுங் கெட்டுப்போயினும் விம்பசூரியன் கெடுதலின்று. அவ்வாறே, உயிர்கட்குள்ள சுக துக்கங்கள் அந்தரியாமித்துவ பரமான்மாவுக்கில்லை.

பரமான்மாவாகிய பரசிவன், ஆன்மாக்களி னிசையிருந்தவாறு சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்

கிரகமென்னு மைம்பெருந் தொழில்களையும் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவனென்னு மைவர்களுள்ளுமிருந்து சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயையென்னும் முதற்காரணங்கண் மூன்றையுங்கொண்டு செய்வன். பிரமா முதலிய ஐவரு ளின்று அஞ்செழுத்தென நின்று செய்தலைத் தன்மையென்றும், அவன் அவள் அஃதாந் சேதனப்பிரபஞ்சத்தி னின்று செய்தலை முன்னிலை யென்றும், பஞ்சபூதாதி மூர்த்தங்களி னின்று செய்தலைப் படர்க்கை யென்றும் பகரலாம். பிரமா முதலிய நான்கு மேனியும் உருவமெனவும், சதாசிவமேனி உருவமு மருவமு மெனவும், இவ்வைந்திற்கும் மேலதாயுள்ள குடிலைப்பாம் அருவமெனவும் விளம்பப்படும். அருவம் இரகசியமாம். இந்த ஆறும் பிரசன்னமாக நிற்கு மூர்த்தியை **அறுமுகச்சிவ** னெனவும், அருவம் அருவமேயாக மற்றைந்தோடும் பிரசன்னமாய் நிற்கும் மூர்த்தியை **ஐம்முகச்சிவ** னெனவுங் கூறலாம். ஒருவனுக்கு விழிகளிரண்டாயினும் அவை, காண்டொழிலி னுடங்கியைந்தொன்றாய்க் "கண்" எனவே நிற்குமாறு போல அவ்விரு மூர்த்திகளு மொருசிவ னெனவே நிற்றல் ஈங்குணரக் கிடக்குமுண்மை யென்க. நிற்க.

அச்சிவனுடைய இலீலா விக்கிரகங்கள் பலவற்றுள்ளும் இலிங்கம், இலிங்கோற்பவம், முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாமகேசுவரம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்திரசேகரம், விருஷபாரூடம், விருஷபாந்திகம், புஜங்க லளிதம், புஜங்கத்திராசம், சந்தியாநிருத்தம், சதாநிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்காவிசர்ஜனம், திரிபுராந்தகம், கலியாணசுந்தரம், அர்த்தநாரீசுவரம், கஜயுத்தம், ஜ்வராபக்நம், சார்த்தூலஹரி, பாசுபதம், கங்காளம்,

கேசவார்த்தம், பிக்ஷாடனம், சிம்ஹாக்னம், சண்டேசானுக்கிரகம், தக்ஷிணாமூர்த்தம், யோக தக்ஷிணாமூர்த்தம், வீணா தக்ஷிணாமூர்த்தம், காலாந்தகம், காமாரி, இலகுளீசுவரம், பைரவம், ஆபத்தோத்தாரணம், வடுகம், க்ஷேத்திரபாலகம், வீரபத்திரம், அகோராஸ்திரம், தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அசுவாரூடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏக பாதத்திரிமூர்த்தம், திரிமூர்த்தித்திரி பாதம், ஏக பாதம், கௌரீவரப்பிரதம், சக்ரதானஸ்வரூபம், கௌரீ லீலாஸமன்விதம், விஷாபஹாரணம், கருடாந்திகம், பிரம சிரச்சேதம், கூர்ம ஸம்ஹாரம், மச்சாரி, வராஹாரி, பிரார்த்தனாமூர்த்தம், ரக்தபிக்ஷாப்ரதானம், சிஷ்யபாவம் என்னும் அறுபத்து நான்கும் **அட்டாட்டமூர்த்தங்க** ளெனப்படும்.

இவ்வாறாய சருவேசுவரனுக்குத் தூலவடிவமாயுள்ள சருவப்பிரபஞ்சமுந் தூல வுடம்பாகும். சூக்கும வடிவாயுள்ள சருவப்பிரபஞ்சமுஞ் சூக்கும வுடம்பாகும். இவை, மாவிசுவரூபமென்றும், பாரமேசுவர வடிவமென்றும் பகரப்படும். ஆகாசத்திற் புகை யணுக்கள், தங்குதல்போல இத்தகைய அண்ட பிண்ட சராசரப் பிரபஞ்ச நாயகனுடைய அற்புதாகாச சத்தியின்கண் உண்டான வடிவமான அண்டகோடிகளெல்லாந் தங்கியிருக்கின்றன வாகலின் யாவும் அவனுடைய சுவாதீனப் பொருள்களேயாமென்க. இத்தகைய பரம்பொருள் இன்னும் மூவண்ணமாக நிச்சயிக்கப்படும். விவரம்:— (க) சருவ வியாபக சருவஞானந்த ஞானாகாசப் பிரம சொரூபம். (உ) வரப்பிரசாத ஞானானுக்கிரக திருப்பிரகடாகந்த கடாக்ஷ பரம். (௩) அகோர வுக்கிர கரும பாவதகன கோபாக்கினி ரூபம் எனலாம். இவற்றுள் மூன்றாவதாலே மதிக்கருணையாக ஆன்மாக்களைத் தண்டித்தலும், இரண்டாவதாலே அனுக்கிர

சித்தாந்த தன்பக்கலிலிருந் தாய்ந்துபெறத் தக்க பலன்களைக் கொடுத்தலும், முதலாவதாமேல ஒன்றாய் வயங்கும்படி கடாட்சித்தலுமாம். ஒன்றாய் வயங்குதல்.— பரமான்ம போதத்தில் சீவான்மபோதம் இலயமாய் ஞானாகாசமேயாய்ப் பேதமின்றிப் பிரகாசித்தலாம். இதுவே, நித்திய கைவல்லிய முத்தியெனவும், சிவ ஐக்கியமெனவும், வாக்குக்கெட்டாத திருவாணையெனவுங் கூறப்படும். இத் திருவாணைத்தினைச் சீவப் பிரம ஐக்கியமாகக் கூறுதல், பிரமம் அநாதியாகவே யாண்டுங் கலந்துள்ளதென்னும் அத்துவைதத்தோடு மாறாவதுமாம். ஈண்டேகான்ம முடிவுகொண்டு யாங்களே கடவுளென்று ஈசுவரோபாசனையைத் தள்ளிவிட்ட வாதிகளையும் இயமன் றனததிகாரத்தா னடாத்துவதுகளின் அவர்க ளிற்குறிலே முத்திநெறி யாதலு மில்லையென லுணரக் கிடக்கின்றது. இதனை,

"பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாதகத் தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தவல வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூர்வேவளர்
சனக னாதிமுனி வோர்கடந்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த சித்தவரு ளியக்கப தீரகவுள
சோம சேகரசிர் பானுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகோ லு
வெம்மு கத்திறும் வணங்குவேன்

நேரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே."

என்று தாயுமானாரும்,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்."

என்று திருவள்ளுவனாருந் தெரிந்தவாறு கொண்டு மறிக. இறைவனடி சேராதார் பிறவிப்பெருங்கட னீந்தாரென்றது தானே, அறுபான்மும்மை நாயன்மார் கொண்ட கொள்கைகளாலும் வலியுறுகின்றது.

ஆன்மாக்களைத் தண்டித்தலென்பது, பாவ நிவாரண காரியமாய்த் தண்டநாயகருகிய காலமூர்த்தியாதி தேவர்களாலும் அரசர் முதலியோராலும் மறுமையிலேனும் இம்மையிலேனுந் தக்கபடி தண்டித்து நியாயஞ் செலுப்பதாம். அப்படிச் செய்தல், பிள்ளைக்குற்ற பிணியைப் பிதாவானவன் வைத்தியனு னீக்க முயல்வதுபோல முயல்வதாம். இது, கருணையேயன்றிக் கொடுமையன்றாகலின் நியாய வழிப் போதரும் மறக்கருணையெனப்படும். இங்கே கருத்தன், தன்னை யண்ணினவர்கட்கே தற்பத் தரித்திரத்தையும், தண்ணீர் தாகத்தையு நீக்குதல் போலத் துன்ப நீக்கம் புரிவன்; அண்ணுதார்க்கு அது செய்யானெனவு முணரக் கிடக்கின்றதென்க. நிற்க.

ஈசுவர சிருட்டி நித்தியமாயின் ஒருவருக்குஞ் சனனமோய்வியாது. எதனாலெனின்,— அன்னமய கோசத்துள்ள உதிரம், மச்சை, மாமிசம், சருமம், என்பு, நரம்பு என்னும் ஆறுதாதுவத்தால் மீறியின் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும்; சக்கு, சுரோத்திரம், ஆக்கிராணம், சிகுவை, துவக்கு என்

னும் ஞானேந்திரியங்களும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கருமேந்திரியங்களும்; பிராணன், உதானன், சமானன், அபானன், வியானனென்னும் வாயுக்களுமாகிய ௨௦ - தத்துவங்க ளொருசேர யாக்கப்பட்ட சூக்குமவுடம்பையுடைய சீவான்மா, தான் நினைத்தவண்ணம் யாதானுமொரு காரியத்தைத் முடிக்க முடியாமே சொப்பன சீவனென்ன மயங்குந்தன்மையா னென்க. இதனால், தூலமிருக்கும்போதே தகு தவங்களைச் செய்து தக்க பலன்களை மக்களுடையவே உணர். இக்காலத்தே எச்சித்தியில்லாதொழியினுந் திருட்டி காரியம் நிகழ்ந்துகொண்டிருத்தலின் விடுதலையுண்டென்பது இதனா லுய்த்துணரத்தக்க நுட்பமா மாதலின் அவ்விடுதலைமுயற்சி வீணேகாதென்பதூஉம், அம்முயற்சிக்கு உபகாரப்பொருளாய தூலவுடம்பும் அளவுடை யாகாரத்தாற் பேணிக்கொளத் தக்கதென்பதூஉம் மறக்கற்பாலன அல்ல.

தூலம்பெறற்குக் கருவிற் புகூஉம் ஆன்மா, வித்தினுள் அங்குரம்போலச் சுக்கிலத்தி லடங்கியிருந்து சுரோணித சம்பந்த மாதலும் ஆசயத்துளிருந்து வளராநிற்கும். சுக்கிலத்தி லுயிருள தென்பதைப் பூதக்கண்ணாடி வாயிலாகக் காணலாம். இவ் வுற்பத்தியின்மீ துண்டாம் ஆகாமியமாகிய புதிய வினைகள், மரித்தவுடன் மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா வென்னும் ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாகிய சஞ்சிதமாகும். பிராரத்தவினைக் கானது போக எஞ்சிய சஞ்சிதம் பின்னே தொடரக் காத்திருக்கும். இதனாற் புதிய ஆகாமியமே பிறவிக்கடலாய்ப் பெருகிவருந்தன்மை யுண்மையால் விவேகியானவன், பிராரத்தவினையைத் தேவட்டவேயென்று

திருத்தியாக அனுபவித்துக் கொண்டு ஆகாமியத்தை அணுத்துணையுஞ் செய்யாதிருக்க வேண்டும். செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்தவிருத்திகள் - ௩ சீவ சிருட்டியே ஆம். விவரம்:—

(க) **காமம்** = இச்சை; தனதானியாதிகளை மேன்மேலுந் தேடுந் தன்மை,

(உ) **குரோதம்** = சினம்; பூசல்

(௩) **உலோபம்** = ஈயாமை,

(௪) **மோகம்** = தான் தேடிய பொருண்மீதுள்ள அதி விருப்பம்,

(௫) **மதம்** = செருக்கு; கிருத்தியாகிருத்தியங் கருதாதெழுதரு கருவம்,

(௬) **மாற்சரியம்** = பொறாமை,

(௭) **இடும்பை** = அவமதிப்பு; உதாசனம்,

(௮) **வேட்கை** = பலதிறத்த ஆசை

(௯) **ஈரிடை** (ஈர்ஷை-ர்) = தமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரல்வேண்டுமென் றெண்ணும் ஒருவகைப் பொறாமை,

(க0) **தர்ப்பம்** (ஐவை-ரீ) = (தன்னையே யுயர்த்திப் பேசு மியல்பு,

(கக) **இராகம்** = பரதார கமன விருப்பம்,

(கஉ) **துவேஷம்** = பிறர்செய்த தீமைகருதி அதுபோன்றதை அவர்க்குத் தானுஞ்செய்யொரு தன்மை,

(க௩) **டம்பம்** = பிறர் கண்டு புகழுமாறு பொருந்தா வணிகளுந் தாங்கல் முதலியன;

(க௪) **அகங்காரம்** = நானென்றெழு மகந்தை

எனவாம். இந்தப் பதினொன்கும் சுத்தகாற பிறப்பிறப்புங் கிசிப்பது உறுதி தான். இவை, சிவ சிருட்டியல்ல; சீவ சிருட்டியே யென்பதற்கு ஏற்புடை நியாயம் உண்டு கொலோ? எனின்,—சிவ சிருட்டியாகிய சராசரப் பிரபஞ்சம் பிரளயத்தி லழியுங் காலத்துஞ் சீவர்களுடைய சனன மரண காரணங்க ளொழியாம னிலைத்து நிற்றலும், சிவ சிருட்டி யிருக்கும்பொழுதே அச் சீவசிருட்டி சூனியப்படு மாயிற் போக்குவரவற்ற மோக்ஷம் பெறலுமாகிய வுண்மை யுண்டென்க.

மோக்கத்தை நல்கியருளுங் கடவுளன்றி வேறியோரா னீக்கப்படாப் பாசமாகிய ஆணவமலம், பசுக்களாகிய உயிர்கட்கு அனாதி யியற்கைத் தென்பதைப் பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கமுடையார் (சிவஞான தேசிகர்)

“ஆணவ மலமான் மாவுக்
அனாதியி லியற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி
யமலவனை யடையா தாவி
ஆணவ மலமான் மாவுக்
கனாதியிற் செயற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி
யமலவனை யடையு மான்மா.”

என்னுஞ் செய்யுளான் மறுத்து, அனாதி செயற்கையாதல் வேண்டுமென்பா ராயினர். செயற்கையினை அனாதியென்பது பொருந்துமாறு முளதாமோ? என்னுங் கடாச் சண்டு பிறத்தல் கூடும்.

அக்கடவுள் காருண்ணிய மெய்தற் கேதுவாஞ் சிவ புண்ணிய தவங்களு ளொன்றாவஞ் சற்குரு வுபதேசமன்றிப் பயன்படாதென்பது—

'புங்க மாஞ்சிவ புண்ணியந் தேசிகர்
தங்கள் வாக்குப தேசம தன்றியே
இங்கி யற்றி னிதும்பய னில்லையாய்
மங்கு மென்னும் வரன்புக லாகமம்.'' — [சிவ
புண்ணியத்தெளிவு]

"த்யாநமூலம் குரோர்மூர்த்தி:
பூஜாமூலம் குரோ:ப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்யம்
முக்திமூலம் குரோ:க்ருபா''

என்பனவற்றா லறியப்படுகின்றது. இன்னன பல. ஒருவனுடைய பரிபாக தசையை ஈசுவரனறிந்து அவனே குருமூர்த்தியா யெழுந் தருளிவந் துரைப்பன வுரைத்தலுமுண்டு; அடியார்களைக்கொண் டப்படி யிழைத்தலுமுண்டு. இவ்வித காரியம், அவனது கருணைப்பிரவாக நியாயத்திற் பொருத்தவாயுள்ளது. மாயாப்பிரபஞ்ச பலனைச் சிறுகிய கிஞ்சிஞ்ஞன் இச்சிப்பான். ஈசுவரனாகிய சருவஞ்ஞன் இச்சியான். இனையவாறு வீடுபேறன்றிப் பிறிதொன்றும் இச்சியாத் தன்மை வாய்ந்தவனே பக்குவமுள்ள சீடனாவன். அவனே, இந்நூலில் விளக்கப்படும் இன்பத்தைப் பெறற் கதிகாரியாவன். இப்பக்குவத்தையே மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென்னுஞ் சத்திநிபாத நான்கனுள்ளும் முதிர்வுடைய தீவிரதரமென்று சிவசாத்திரங்கள் கூறும்.

தன்னுண்மையையும், பசுவையும், சிவத்தையும் ஆவி காணாவா றுவாரணித்துச் செம்பிற் களிம்பெனப் பரிபாகத்தி னீங்குமொரு சத்தித்தன்மையுள்ள அவ்வாணவமும், இருட்டி காலத்திற் காரியப்பட்டு வருந்தன்மையுள்ள கன்மமும், பிரபஞ்சத்தைத் மெய்யென் றனுபவிக்கச் செய்கின்ற

திரோதையும்; விஞ்ஞானகலருக்குத் தனு கரண புவன போகமுஞ் சுத்தவித்தையாதி ஐந்து தத்துவமுமாயிராநின்ற சுத்த மாயையும், பிரளயாகலருக்குஞ் சகலருக்குந் தனு கரண புவன போகங்களாயும் பிரகிருதிக்கீழே முதலிய வெழு தத்துவங்களாயு மிராநின்ற அசுத்த மாயையுமென மலங்க ளைந்தாம். இவ்வைந்தும் பாசமென்னுஞ் சொல்லி லடங்கும்.

அட்ட வித்தியேசுரரும், அணுசதாசிவரும், சத்த கோடி மகாமந்திரருமாகிய இம்முத்திறத்தவருமே விஞ்ஞானகலர். இவர்கள், ஆணவ மலமுஞ் சுத்த மாயா போகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பரமசிவனா லனுக்கிரகிக்கப்பட்டுப் பரமுத்தியை யடைவர்.

நூற்றுப் பதினெட் டுருத்திரர்களும் புவனகருத்தாக்களுமா யிருப்பவர்களே பிரளயாகலர். இவர்கள், ஆணவங் கன்ம மென்னு மலமிரண்டும் அசுத்த மாயாபோகமு முடையார். இவர்கள், பக்குவத்திற் பார்வதி பதியாகிய அந்தப் பரமசிவனே மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திரங்க ளிலங்கத் திருமேனிகொண் டெழுந்தருளி வந்து செய்யு மனுக்கிரகத்தாற் பரமுத்தியை யடைவர்.

பிரமா விட்டுணுமுதற் கிருமி யீறாகவுள்ள சீவர்களே சகலர். இவர்கள், ஆணவங் கன்மம் மாயையென்னு மல மூன்றும் பிரகிருதியிலே தனு கரண புவன போகமு முடையார். இவர்கள், பக்குவத்தி லப்பரமசிவன் மானுடச்சட்டை சாத்திச் சிவனுடைய வுருவும் பேரு மொழிப்பா னுருவும் பேருங்கொண்டு ஞானாசாரியனா யெழுந்தருளி வந்து சத்திநிபாத முறைமையறிந்து செய்யுமனுக்கிரகத்தான் முத்தியை யடைவர். விட்டுணுவைச் சகலரிற் கூட்டற்கு

இடங்கொடாது கடவுளெனக் கூறுவது **வைணவாகமம்.** அஃதெவ்வண்ணமாயினும் இந்நூலுழைக் கூறப்படுஞ் சிவஞானத்திற் கிழுக்கில்லை.

தனுவென்பது— பல்வேறு வகைப்படு தூலவுடம்பாம். ஆயுள், ஒரு கடிகை முதற் பத்துத் திங்கள்காறும் பல திறமாம்.

கரணமென்றது— சூக்கும வுடம்பாம். தூலமழிதல் போலழியா வன்மைத்து.

புவனமென்றது— பலதிறப்படு நாடு நகரமுமா யுள்ளது.

போகமென்றது— கன்மானுபவங்கட்குரிய உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, விழுங்குவன, நக்குவன, உடுப்பன, முடிப்பன, தரிப்பன, திமிர்வன, இடுவன, ஏற்பன, நடப்பன, படிப்பன, பார்ப்பன, கேட்பன, தாரம், தனயர், பந்து, மித்திரர், பொன், மணி முதலியனவாக வகைசெய்து கூறப்படுவதாம்.

இவற்றுள், தனுவும் புவனமும் போகமுந் தூலசிருட்டியி னுள்ளன: கரணஞ் சூக்கும சிருட்டியினுள்ளது: பூததன்மாத்திரை, அகங்காரம், புத்தி, பிரகிருதி, கலை யென்பன ஒன்றற்கொன்று சூக்குமமா யிருக்குமென்ப.

இரண்டாவது

அபக்குவாகதியியல்

மூன் மொழிந்த பக்குவமில்லா அபக்குவரெவர்க்கும் அருளானந்த முண்டாகாது. எதனாலெனின்.— எல்லாம் மண் முதலிய பூதப் பொருள்களாகவே காணப்படுகின்றன: அவைக ளியற்கைய? அவைகளை யாரும் ஆக்கியளித்து ஒழித்தல் கூடுமென்று எண்ணற்கு இடனின்று: அவைகட்கு வேறாய் ஆன்மா வென்பதொன்று உண்மைப் பொருளா யுள்ளதென்றும், அதனைத் தனது ஆணைவழி நிறுத்தியாளும் ஈசுவரனுள னென்று முரைக்குஞ் சாத்திர சித்தாந்தங்கள் நம்பத்தக்கன வல்லவெனச் சாதிக்கத் துணியு நிரீசுவரவாத நாத்திக ளிடத்திலேயுந் தெய்வ முண்டோ? இன்றோ? என்னுமையம் முழுதுந் தொலையாது தங்கியிருத்தல்போலத் தெய்வமுண்டென்னும் ஆத்திக ளிடத்திலேயு மஃதுண்டோ? இன்றோ? என்னுமையந் தொலையாது தங்கியிருத்தலின்றே லென்க. இவ்வையம் மறமாறு சற்குரு முகமாகச் சிவஞான சாத்திரங்களை யினிதோதி யுணர்தலென்னும் அபரஞானந் தோன்றிய பின்னர்க் குருமொழி பிடித்துத் தரிசித்தலென்னும் அனுபவ ஞானமாகிய பரஞான மெய்தினவரே யவ்வானந்த முடையோராவர். சாத்திரங்கள் ஒன்றோடொன்று முரணுமாலோவெனின், — சிவபரம்பொருளைத் தியானித்திருக்கும் வழி யெய்தப் பெறுமொரு ஞானமே சற்சாத்திரங்களுட் கொளக்கிடக்கு முண்மையாகலின் அது, முரணுமாறு யாண்டையதென்க. "வேறு சில விடய வேறுபாடுகள், கற்பந்தோறும் படைப்பு வேறுபா டுடைமையி

னெய்தியனவா மாகலின் வேறுபடக் கூறலும் பொருந்து மென்று சமாதானஞ் சாற்று புத்தகங்களுமுள. அங்ஙன மாயின், சீதாபகரணமும் இராம இராவண யுத்தமும் பன்முறை யேற்பட்டு அது சிறிது சிறிது பேதமாக வுளதென்றே கோடல் வேண்டு மென்பதும் இப்படி யொவ்வொரு வரலாற்றிற்குங்கோடன் முறையாமென்பது மேற்படலாலும், அனைத்து மொற்றுமையாகாமே சிறிது சிறிதே பேதமெய்துத லெவ்வாற்றா னென்னும் இருங்கடா வெழுவதாலும், அப்பேத காரணமுஞ் செய்கையும் அநாதி தொடக்கமாக ஈசுவரனா லேற்படுகின்றன வென்பது கொளக் கிடத்தலாலும், இவ்வகை யியல்புடை யீசுவரன் சீவர்களகத்தே இது பாவம் இது புண்ணிய மென்பன கண்டு நீதி செலுத்த வுரியவனாகா னென்பது சித்திக்கின்றமையாலும் அச் சமாதானஞ் சால்புடைத்தன்றென விநோத மறுப்பினர் மறுப்பரால். அன்றியும், கற்ப காலந்தவிற புத்தகங்க ளழியா திருக்கு மென்றற்கும், இன்ன கற்பத்தில் இன்ன புத்தகந் தோன்றிற் றென்னும் விவரத்தை அவ்வப்புத்தகங்களுட் காணப் பெறாதார் மேலே கூறியவாறு கற்பபேத மெடுத்துக் கழறற்கும் வற்புடை யேது வின்றென்னு மறுப்பு எதனா லொழியுமால்! கற்பந்தோறு மேற்பட்ட தேவார திருவாசகாதிகளு முளவோ? அவற்றை யிஞ்ஞான் றெடுத்துக் காட்டுவரு முளரோ? என்னுங் கடாக்கட்கு இறுக்கும் விடை எவை யாமால்!! பிரபவமுதலிய வருடங்களுஞ் சித்திரைமுதலிய மாதங்களும் ஞாயிறுமுதலிய கிழமைகளுஞ் சென்று சென்று மீளுமாறு இந்திரர்களும் மனுக்களும் வருவரென்றல் காலவளவையையும் அதிகாரி மாறி வருதலையுங் குறிப்பதாதல் வேண்டும். பிரமன் முதலினோர் தோற்றமு மொடுக்கமுங் காலவளவையுட் படுவன வாயினும்

அன்னோர் புரி சிருட்டி முதலியன, சீவர்கண்மாட் டெஞ்சி யுள்ள இச்சைவழியே நிகழ்வனவாகலின் ஈசுவர காரியம் விதிவாதத்துட் படுமென்றற்கும் இடனின்றன்றே. பன் முறை பிரதி செய்யப்பட்ட வகையானும், ஒருவர்க்கொரு வர் போதித்த வகையானும், அப்போதிப்பு — ஒருவன் பெயரே ஊரே வேறொருவனுக்கு மெய்தலா மென்பதை யுணரா தெழுந்த வாற்றானும் பிரதி வேறுபா டேற்பட் டிருத்தல் கூடுமென்று நிச்சயம் ஈண்டேற்புடைச் சமா தானமாமென எண்ணும் விவேகிகள், நியாயவழியே அவ் வேறுபாடும் நீக்கற்பாலதாமென் றுரையார் கொலோ! மேலே கூறிய நிரீசுரவாத அவிவேகங் கணித்து இங்கே கண்டித்துக்காட்டுவ தென்னெனில், —

மூன்றாவது

நிரீசுரவாதகண்டனவியல்

அநாதியான கடவுளொருவ னுண்டென்னும் ஆத்திகரி னும் விசேட அறிவு படைத்த சுய ஞானிகள் யாங்க ளென்று பிதற்றிப் பூதங்களேயே, யநாதி யென்னும் பூத வாதியோர், தாங் கற்ற (Chemistry) கெமிஸ்ட்ரியின் படிக்கேனும் வேறு (Science) சயன்சின் படிக்கேனும், தஞ் சுயஞானத்தின் படிக்கேனுந் தக்க ஆலோசனை புரிந்து மண்ணாதியவைகளையும் அம்மியிலவையைத் திரைத்து உருட் டியோ வேறெவ்விதமாகவோ இஞ்ஞான்று முளைத்து வள ரத்தக்க டாதானுமொரு விதையாஞ் சிருட்டியைச் செய்ய மாட்டுவாராயின், அஞ்ஞான்றும் இன்னணம் எவனோ ஒரு மனிதனிருந்து செய்த காரியமே இவ்வுலகாயுளது ; அவன்

னையோர் போல மரித்துவிட்டானென்று நிச்சயிக்கலாம். அஃதொழிந்து பூதப் பிரவிருத்தியாய் யாவு முண்டாயின வென்று பிதற்றுவது குயவின் வனையாக் குடமென் றதிர்ப்ப தொக்கும்.

அவர் நினைப்பின்படி பூதங்களே யாவையு முண்டு பண்ணுமாயின், எல்லா யோசனையு முடைய அறிவு அவற் றிற் கிருக்கவேண்டு மன்றோ? ஆயின், அவ்வறிவைக் கடவுளாகவேறு மவரொப்புக்கொள்ளா தொழிதன் மட் டறு மடமையாமே!

மேல், அந்தப் பூதங்க ளொன்றாய்ச் சேர்வதுகா னறி வென் றவாறையின், அவைகளைச் சேர்த்துவைத்த அறிவு யாதோ? என்னுங் கடா வெழுவதோடு அறிவில் பொருள் களின் கூட்டத்தா லறிவு தோன்றுமென்று பொருளியல் பறியா துரைப்பதென்? என்னும் வினாவுமெழும். மேல், ஒன்றாய்ச் சேர்வதும் (Nature - நேச்சர்) இயல்பென் னின், — தனித்தனி அறிவிலா வுள்ள அவற்றின்கட் டோன்று மரஞ் செடி முதலியன, பூத்தற்குங் காய்த்தற் குங் காலவரையறை யேற்பட்டிருப்பதென்னை? என் னுங் கடா வெழுதலோடு காலமே மேம்பட்டபொரு ளென் றலுஞ் சித்திக்கும். ஈண்டுக் காலமென் ஒருபொரு ளின் றெனின், — அப்பூத்தலுங் காய்த்தலு மில்லா தொழியும்; இராப்பக லில்லையென்பது மெய்துமாகலிற் காலமறுப்புப் பொருந்தாதென்பதூஉம், அக்காலமு மறிவிலதாதலின் அஃதுந் தானே * பிரபஞ்சத்தை வரம்புவழி நடாத்து மெனற்கு இடனின்றென்பதூஉந் தோன்றும். இவை யேயன்றி, அப்பூதங்கள் ஆகாயம், காற்று, தீ, நீர், மண் ணாயிருந்த தன்மையாயின், பை, முட்டை, வியர்வை, நிலம் என்னு நாற்றிறத் தோற்றத்தையு முண்டுபண்ணிய

காரணமென்னை? கண்டு களிக்கவா? களித்தற்குக் கண்ணுங் கருத்தும் அவற்றின்கட் காட்டல் கூடுமோ? காரணமில்லை யென்புழியு நாஸ்திகனாகிய நீ செய்யுங் காரியம் ஒரோவொன்றுக்குங் காரணங் காணக்கிடக்கையில், நீ தோன்றற்கு முதற்காரணமாயிருந்த பூதங்களின் காரியத்திற்குமட்டுங் காரணமின்றென்ப தெவ்வாற்றாற் பொருந்தும்? என்னுங் கடாக்களு மெழுதருமால்.

இன்னும், யாதானுமொரு வித்துவினிடத் தன்றோ இயங்குதிணை யறிவின் றோற்றம் வளர்ந்தவால் காணப்படுகின்றது. ஆயின், பிரம்மவித்து, யாண்டிருந்து தோன்றிற்று? அந்த வித்து தோன்ற முன்னர் அறிவில்லாப் பூதங்கள் எப்படி யத்திற வித்துவை யுண்டுபண்ணும்? என்றும் வினாக்களு மெழும். இப்படிப் பல் கடாக்கள் எழுதருமாற்றானும் பூதவாதிவாய் பொள்ளென மூடிக் கொள்ளு நீர்மைத்தேயாம்.

பூத மைந்துடன் சூரியன், சந்திரன், உயிரொன்று மூன்றுஞ் சேரப் பொருள் எட்டாகும். இவ்வெட்டையும், அகண்டிதாகார சிவனுக்கு அட்டமூர்த்தமென்று பிரமாண நூல்கள் செப்புதலானே எங்கே பார்த்தாலுந் தெய்வங் காணப்படுகின்றதே; கண்டுந் தெய்வமில்லை யென்று நாத்திகர் கூறுங் கூற்றுத்தான் எவ்வாற்றான் மணம்பெறும்! அஃதும் நாத்திகமேயாதல் சரதம்.

காணப்பட்ட எந்தப் பொருளையும் பிரித்துப் பிரித்து நசித்து நசித்து எவர் பார்க்கினும் அக்கினியிலிட்ட காட்டாறாம் அன்னியப்பட்டதுபோல ஒன்று விசேடித்து நிற்பதே உறுதி. அது, முக்காலத்து மழியாச் சத்திய பதார்த்தமெனவும் விவேகிகளறிவர். அவ்வியவே மொழி

யினும் அதனுள்ளுடம்போடு அதிசூக்கும வத்துவாயிருக்கு மான்மா வென்பதொன் றுண்டெனவு மறிவர்.

அந்தரப் பிரவேச விஷித சூக்குமரூப பைசாசங்களையு மிங்கே யுதாரண மாக்கலாம். பைசாசங்களி னிலைமை களையே யறியா நாத்திகர், பரமார்த்த பராபரத்தின் றன் மையினை யெப்படி யறிய வல்லுநராவர்!

புலால்விழிக்குப் புலப்படா வெதனையு நாம் நம்பமாட் டோமென்று மொருசார் நாத்திகர், இரும்பைக் காந்த மிழுக்கும்போது அதைப்பற்றி யிழுக்க நாம் பார்த்ததில்லையே, இரும்பு தானே யெப்படியோ கூடிற்றென்று அறிவுமாழ் கிக் கூறவேண்டியவரே யாகின்றார். நம்புவாராயின், கொண்ட நாத்திகத்திற்கு ஆணியெய்துமே. தூல திருட் டிக்குப் புலப்படாச் சூக்கும காரியங்கள், தெய்வாதீனத் துள்ளன வெனற்கு யந்திர சித்திகளும், மெய்யடியவர் மாட் டுண்டாம் பற்பல வற்புதங்களு முளவாமே.

தெய்வ மின்றென்றுயிர்கற்ற நாப்படைத்த நாத்திகர், தாம் பயிலு மொழிகளைப் பிரசவ அறைக்கு ளிருந்த படியே தாமே கற்றுக்கொள்ளாம லுரைப்பா ருரைகேட்டுப் பகரப் பழகிப் பின்னர் விதண்டை படிப்பதும், யாங்கள் சுயஞானிக ளென்பது மெத்தன்மையவாம்! உரைப்பா ருரையே யெவர்க்கும் பரம்பராக்கிரமமாக நிகழ்வதை அவர் ஒப்புவாராயின், அதற்குப் பூருவாசாரிய ரொருவ ரிருந்தவ ராதல் வேண்டு மென்பதும் அவ ரொப்பவேண்டியதே யன்றோ. அப் பூருவாசாரியரான் முடிவுசெய்யப்பட் டிருக் கிற கடவுணிச்சயத்தை, அவர் தந்த மொழியை அநு சரித்து வருவதையன்றித் தாமே யொருமொழியுஞ்செய்யச் சத்தியற்ற கடவுட் டுரோகிகளாகிய நாத்திகர் மறுப்பது. அண்டத்தை யெறும்பு விழுங்க முயறலொக்கும்.

அந்தகாரத்திருக் கப்பட்ட பொருளினைப் புன்புலாற் கண்ணுடைய வொருவன், விழித்து விழித்து நோக்கியுங் காண்ப தில்லை. அப்படிக் காணாமையால், அங்கே யாதொரு பொருளுமில்லையென்று அவனுரைப்பதுபோல, ஆணவமல விருளிற் கிடந்தவாறே சிற்றறிவுஞ் சிறுதொழிலுங் கொண்டுள்ள நாத்திகரு முரைக்கின்றனர். அவர், எவ்வாற்றாற் கடவுளைக்காண ஆள்வினை புரியினுந் தம்முடைய யோசனையாலேனும் புலால் விழியாலேனுங் காணார்; விகசித போதமாகிய ஞானதிருட்டியுடையாரே காண்பர். நிற்க.

தூலவிழி தூலசடத்தையும், சூக்குமவிழி சூக்கும சடத்தையு நோக்கு நீர்மைய வென்னும் முறை மறந்து, முகத்திலுள்ள ஊனக்கண்ணையன்றி யகத்திலுள்ள ஞானக் கண்ணின்றென்றுங் கண்டதே காட்சி கொண்டதே கொள்கை யென்றுங் கதைக்கும் அனீசுரவாதிகள், ஆய்வுங்காற் கனுக்கண்ட கண் யாதென்று தீர்வைசெய்ய வல்லார்! மனஞ் சென்றவாறே கூறிக்கொள்வது அவர் மாண்பு போலும்!!

பிரத்தியக்ஷ மாத்திரையே யாம் நம்புவோமென்னு நாத்திகர், தம்மையீன்றா ளின்னாளென்பதை யெவ்வாறு நம்பினர்? என்னுங் கடாவுக்கு அது கண்டவர் சொல் வழியே யென்பதை, விடையாயிறுப்பா ரென்பராயின், கடவுளைக் கண்டவர் சாற்றிப் பொறித்த சாத்திரத்தின் படி கடவுளுண்டென்பதையு மவர் நம்பாதொழிவ தென் கொலோ? எனக் கடாவுக. மேல், தன்னை யீன்றனைத் தானறியாவிடினும் பிறர் மகவீனுவதை நாங் கண்ட வானது பிரத்தியக்ஷமன்றோ வென்பரேல், கடவுள் சகசிருட்டி செய்ததை நாங் காணவிடினுங் குடத்தைப் பண

ணுவது குலாலனென்று நாம் பார்த்தபடி அதுவும் பிரத்தியக்ஷமென் றெண்ணாமை யென்னே! என்க. மேலு,

கடவுளிருப்பின் அக்கடவுள், கொலைமுதலிய பிழை செய்தாரை யவ்வப்போதே யடக்கியாளாது வாளாவிருத்த லென்? என்றும் அவர் வினவுவரேல், எந்த அரசனாவது காலவயப்பட்டொழியா திங்கிருக்கின்றனன்? என்றும் வினவுமெழு மென்பதை யவர்க் குணர்த்தலாம். மேல், பிருதிவி முதலிய பூதங்கள் வலிமெலி வுறுத லியல்பாத லின் ஒரு மனிதன் ஒழிவு மங்ஙனமாமென அவர் கூறுவ ரெனின், — கடவுளா னல்லது வினைப்பய னளவாகவே அதுவுமா மென்றும், ஒருவன் வினை செய்த காலம் ஒரு விதையை விதைத்தகால மொக்கும்: அவ்வினை யனுபவ காலம் விதை முளைத்து வளர்ந்து காய்த்துப் பழுத்துப் பலன்றரு கால மொக்குமென்றும், அப்பலனல்கு காலம் பெரும்பான்மையும் மறுமையிலவைத் தெண்ணப்படுமென் றும், சுதந்திரமான உபகார கருமமுயிர்கட் குண்டாகி அவ் வழியு முய்திபெறுமாறு அம் மறுமையிலே நியாய மேற் படுமென்றுஞ் **சற்சாத்திர நிபுணர்** சாற்றுவரென வவர்க் கறிவுறுத்தலாம். சிவான்மாக்கள் முன்னிழைத்த கன் மத்துக்கீடா யிப்பொழுது உற்பவித் தனுபவிக்குஞ் சுபா சுபங்களை விவரித்து" நிகழ்கால வனுபவத்தா லவ்வி ரத்தை யுறுதிப்படுத்தாநின்ற **கமலயாமுனிவருடைய** பண்டைத் தமிழ் நூலொன்றனை யாங் கண்டது முண்டு; சோதித் துண்மை யுணர்ந்தது முண்டு.

பட்டினத்தடிகளுடைய சீடராய்த் திருவிடை மரு தூர்ச் சிவாலயத்தின் மேற்கு வாயிலில் வைகிய பத்திரகிரி யாரால் அன்னமளித்துக் காக்கப்பட்டு வந்த வொரு பெண்ணாயானது, அவரது கைப்பாத்திரவடியுண்டு மரண

னாகிக் காசிராசனுக்கு மகளாய்ப்பிறந்து அவ்விடம் விட்டுத் திருவிடைமருதூரை யடைந்து **பத்திரகிரியாரைத்** தரிசித்து "அடிநாய் மீண்டுந் திருவருட் பேற்றிற்கே வந்தது" என்று பணித்துப் பணிந்து அவரோடு சிவச்சோதியுட் புகுந்து முத்தியடைந்த மெய்ச்செய்தி, உயிரிற்கு இறப்பும் பிறப்பு முளவென்பதை யினிது நிறுவுமாகலின் இஃது மிக்குக் கருதிக்கோடற் பாலதன்றோ?

நாத்திக மறுப்பாக இன்னணம் பல கூறப்பட்டன. இவற்றினின்று மொருண்மை யினிதுணரக் கிடக்கின்றது. என்னை? பிண்டத்துள்ள நீர், நெருப்பு, காற்றென்பவற்றிற்கு வேறாய் ஆதாரமாய் அண்டத்தி னம் மூன்று மிருத்தல் ஆகமவளவை அநுமானவளவை யல்லாத **காட்சியளவை** யாகலின், இவ்வளவை வழியே பிண்டத்துள்ள அறிவிற்கு வேறாய் ஆதாரமாய் அண்ட முதலிய எக்கண்ணுமொரு பேரறிவிருத்த லறியப்படுகின்றது; அதுவே கடவுளெனப்படுவதாகலின். இவ்வளவை, நாத்திக வீரரை நனி யடைத்தற்கு நல்ல கபாட மாமென்பதை யோர்ந்த விவேகி யறியாதொழிவன்? மாயை யின்றேல் மத தருக்கங்களுஞ் சிவமின்றே லறிவின் மேம்பாடு மில வென்று நிச்சயத்தை யோர்ந்த மந்தமதி யுணரவுள்ளான்?

எல்லாம் வல்ல தெய்வம், ஆன்மாவுக் கிரகார்த்தத் திட்டத்தலக்கண உருவாயிராதென்றற்கு மிடனின்று.

நான்காவது

பாவபரிகாரவிவரவியல்

ஒருவனுடைய சீவன் மறைபொருளா யிருப்பதுபோல, ஆற்று பாவ புண்ணியங்களும் அவற்றிற்குப் பலனளிக்குந் தெய்வமு மறைபொருளா யிருக்கின்றனவாகலிற் பாவத்தையும் புண்ணியத்தையு மனிதர் கருதிப் பாராது அகஞ்சென்றவாறு நடப்பவராயினார். மேனொடிக்கபடி தெய்வமுண்டென்று நிச்சய மொருவனுக்கு உறுதியாயுண்டாயின் அவன், இரகசியமாகு மெவ்வித பாவத்தையு மியற்றாமே அரசனாணைக்கு அஞ்சி நடந்தாங்கு நடப்பன். ஒருவன் பாவஞ்செய்து மேன்மையா யுயிர் வாழ்வதினும், இழி தொழிலாளர்க்கு ஊழியஞ்செய்து உண்ணல் மிகவு நன்று.

பரகதியெனுஞ் சுகத்தைநல்கும் அருளெனும் பரமௌடதத்திற்குப் பத்தியமுறிவு பாவமெனும் பதார்த்தமாம்.

ஆன்மார்த்த பரார்த்த பூசைகட்கு உதவப்படு நறும் பண்டங்களைப் பரம்பொருள், திருத்தி மாத்திரையே அங்கீகரிப்பதன்றி அனுபவித்து ஆனந்திக்குமெனல் பொருந்தாது; அக்கினியாற் குளிரை நீக்கிக்கோடன் மான அப்பிரம காரியத்தாற் பாவநீக்கமும் புண்ணியமும் பெறலா மென்றல் பொருந்தும்; பரம்பொருள் பசிமுதலியவற்றான் வருந்துமுயிரன்றாகலின்.

ஐந்தாவது

பரமேசுரசந்நிதிபோதகவியல்

கடவுள் சொரூபத்தைத் தரிசித்தல், தன்னைத் தரிசித்தாலன்றிக் கூடாததாம். அது, முத்துச்சிப்பியின் மாமிசத்தை நீக்கித் துணிசெய்யு மித்திலத்தைக் காண்டலென ஞானத்தாற் காணத் தக்கது. அந்த ஞானம் எவ்விதம் விருத்தியாமெனின்,— மேலுவலப்பட்ட யாவு முணர்ந்து பின்னைக் கழறப்படுங் கட்டளைகளின்படி நடந்துகொண்டு ஈசுவரப்பிரீதியா யிழைக்குஞ் சற்கரும புண்ணியஞ் சித்தசுத்தியை நல்குமாற்றான் மீக்கொள் ஈசுவரத்தியானயோகம் ஞானத்தை நல்குமென்க. மறுமைப்பலன் விழைந்து காமமாக வியற்றுஞ் சற்கருமங்கள், அவைகளை யனுபவிக்கப் பிறவியை நல்குமென்க. பாவஞ்செய்வார் அதனை மறைவாகச்செய்து பலன்பெறல்போலச் சற்கரும புண்ணியஞ் செய்வாரும் அதனை மறைவாகச்செய்து பலன் பெறல்வேண்டும். பாவஞ்செய்தார் விசனித்து அதனை வெளிப்படையாய்க் கூறிக்கொளலால் அப்பாவத்தை யழிப்பவராமாறு புண்ணியஞ் செய்தாரும் அப்புண்ணியத்தைப் புகழ்ந்து கூறிக்கொளலால் அதனை யழிப்பவராவர்; உய்த்துணர்ந்துகொள்க.

ஒருவன் ஞானியான பின்னரும் அவன் சற்கருமம் புரியவேண்டாவோ? எனின்,— பிராரத்தந் தவிர ஆகாமியஞ் சஞ்சிதமென்னு மிரண்டும் ஞானியைப்பற்றா தொழிதலானும், பிராரத்தமாகிய கறங்கு சுழலுங்கா லதன் கால்போல அவ னசையா திருத்தலானும் அது வேண்டா வென்றே கூறலாமாயினுங் கட்டாயமொன்று மின்று;

தாமரையிலைநீர் போல்வா ரென்க. ஞானியாதற்கு முன் ஆற்றிய புண்ணிய கருமங்களைத் தன்னை விசுவாசித்தவர்கள் பாலும், பாவ கருமங்களைத் தன்னை நிந்தித்தவர்கள் பாலும் ஒப்புவித்துவிட்டுப் பாவ புண்ணிய கருமாதீத னாய்ப் பிரகாசிக்கத் தக்கவனு மிவனே. ஞானி செய்யுஞ் சற்கருமம் அவனைப் பந்தப்படுத்தா திருத்தல், உயிர்களின் பொருட்டு ஈசுவர னுக்காகின்ற புண்ணியகருமம் அவ்வீசுவரனுக்குப் பலன் கொடாதிருத்தலை யொக்கும்.

வேதத்திலுடைய கருமகாண்டத்தில் யாகாதி சற்கருமங்களை இன்ப மீயுமென் றியம்பியதுமுண்டு. அது, மண்டின்ற குழவியி னொழுங்கலுக்கு நல்ல ஔடதமூட்டு கியத்தல் இனிப்பான பண்டங்களை முன்னர்க்காட்டி யழைத்தலைச் சிவணும். இலௌகிக இச்சையுள்ளார், பற்றறு நிலைக்கண ஞானத்தைப் பொருந்தாரென்பதை யுத்தேசித்து அங்ஙனம் அநித்தியமாக போகங்களையேனு மெய்துகவென்றுங் கருமங்களினை விதிக்கப்பட்டவிது, புருஷார்த்த முடிவின்றாம்.

வைத்து மறந்துவிட்ட பொருளை ஞாபகத்தாற் கண்டு பிடிப்பதன்றிக் கருமத்தாற் கண்டுபிடிப்பதில்லை. அது போல் மறதியான அஞ்ஞானம் அந்தர்முகமாகிய பரமான்ம சிந்தனையாலே நசித்து ஞானந்தோன்றிய ஞான்று தன்னுடைய முற் பிறப்புக்களையெல்லா மொருவனறிதல் கூடும்; கருமத்தாற் கூடுவதன்று. அற்றேல், விருத்தியாகிற ஞானமு முயற்சியின் பாற்படுதலின் அதுவுங் கரும மாகாதோ? என்னு மோராசங்கை இங்கே தோன்றும். அது, புருடதந்திரமாகிய தேகமுயற்சி வினைதவி னுமைப்பி லாங் குழம்பானது வற்றித் தந்திரத்தாற் சேற்றை நீரினின்றும் பிரித்து அச்சேற்றோடு தானுந்தாழ்ந்து போதல்போல

அக்கருமமுமாமாற்றொழியும். இவ்வித தந்திரம், ஏனைய கருமங்களின் வன்மையாற் பை முதலிய நாற்றிறயோனி, தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவர மென்னு மெழுவகைத்தோற்ற மென்பவைகளிலும் உயிர் பிறந்திறந் துழிதரும். அவ்வாறு பிரம சிருட்டி முதல் இன்றளவு முடிவில்லா துழிதரு மான்மாக்கள், வீடு பெறுதற்கு இந்நூலிற் சொல்லப்படு மொருஞானமே விரும்பல் வேண்டும்.

இந்ஞானமு மிதனை விருத்திசெய்யக் கூடிய நிட்காம ஈசுரபத்தி விசுவாசமுமே எவர்க்கும் பொதுவாவன. இவையேயுமன்றி, அருளி தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியவற்றைப் பாராயணம்பண்ணல், சிவ சரிதங்களைச் சிரவணஞ்செய்தல், விரதங்களையனுட்டித்தல், தேவப் பிரீதியான திவ்விய பாடல்களைப்பாடி மாலையா மாறு செய்தல், சிவநாம மந்திரங்களைச் செபித்தல், தீர்த்தங்களாடல், கோதான முதலிய தானங்களைச் செய்தல், சிவதொண்டு செய்தல், தொண்டர் தொண்டு செய்தல் என்பன முதலிய பலவித நிட்காம கருமங்களும் முத்திக்குச் சாதனங்களேயாம். இவற்றுள், சிவபூசையினின்றுந் தொண்டர்க்காற்றுந் தொண்டு விசேடமாம். அதுபோலச் சிவாநிக்கிய குரு கடாக்ஷப் பிரம ஞானோபதேசத்தினு லுண்மையாகிய தன்னை யறிதலும் வீடுபெற நிற்றலின் விசேடமாம். சிவஞான சொரூபிகளாயுள்ள அடியார்க்காற்றுந் தொண்டால் இல்லறத்தார்களுந் துறவறத்தார்களு நற்கதி பெறலாம். இதற்கொரு காட்சியளவை காட்டுதும். அது வருமாறு :—

திருவிடைமருதூர்ச் சிவாலயத்தில் வைசிய திருவெண்காட்டடிகளெனும் பெயரிய பட்டினத்தாரும் அவ

ருடைய சீடராய பத்திரகிரி யாசரும் புசித்தெஞ்சிய உச்சிட்டப் பிரசாதத்தையே உண்டுகொண்டிருந்ததும், அவ்வரசர் தமது கைப்பாத்திரத்தைக் கீழெறிந் துடைத்த போது அஃதடியுண்டு மரித்துவிட்டதுமான ஒரு பெண்ணாயி னுயிரானது, காசிமன்னனுக்குக் கவினுடைப்புத்திரியாய்ப்பிறந்து வளர்ந்துவரு நான்று அவளது பருவங் கருதுபு அரையன் மணமகனை விசாரித்த தோர்ந்த அப்பெண்மணி, இடைமருதூர்ச் சிவாலயத்தின் மேலை வாயிலிலே நிட்டை கூடியிருப்பவர் எனக்கு நாயகனாவார்: அவர்பா லென்னைச்சேர்ப்பது நுங்கள் கடனென்று வேண்டுதல் செய்துகொண்டபடி செய்வித்த அவ்வரையன் முதலியோர் காதுகளுங் கேட்கவே கண்களுங் காணவே பத்திரகிரியடிகள், அப்பெண்மணியுடைய பூர்வ வர்த்தமானமெல்லாம் அவண்மொழி வழியே கேட்டபின்னை அவளது கரமலரைப் பற்றிக்கொண்டு சென்றுகீழை வாயிலிலிருக்கின்ற குருநாதரைத் தரிசித்து நின்று "சுவாமி! நின் உச்சிட்டப் பிரசாத முண்ட நாய்க்கும் மறுபிறப்புண்டோ?" என்று வினவலும் அது செவி மடுத்த அக்குருநாதர், "அது சிவ சம்மதம், மணம் செய்யலாம்" என்று கூறித் திருவுளத்தைச் சிந்தித்த வுடனே அங்கே பரஞ்சோதி தோன்றிப் படர்ந்தது. அதற்குள் அப்பெண்ணும் பத்திரகிரி யடிகளும் புக்குப் பிறவாப்பே றெய்தினர்க ளென்னுந் திவ்விய சரிதையாம்.

மேற்பணித்த நிச்சயத்தினுண்டாம் பதிஞானப் பலனது, விவசாயிக்கு முன்னர்த் துன்பமும் பின்னர் இன்பமு முண்டாதல்போலப் பொருந்துவதாகும். அவிவேக அகிருத்தியத்தி னுண்டாம் பலன், வியபிசாரி யனுபவம்போல முதலி லின்பமும் பின்பு துன்பமுமாகப்

பொருந்துவதாகுமாதலின், ஞான பக்குவியானவன், முன்னங் கூறியுள்ள காமாதி சித்தவிருத்தி பதினொன்றையு மகற்றி, அடியிற் கூறப்படு கட்டளை பதினொன்றையுங் கைக்கொண்டு, அவற்றுட் குறிக்கப்படு தீமைகளைச் செய்யாமலுஞ் செய்விக்காமலுஞ் செய்ய வுடன்படாமலு நீங்கியிருத்தல் வேண்டும். கட்டளை விவரம் :—

(௧) பொய் புகலாமை,
(௨) கள்ளஞ் செய்யாமை,
(௩) இலாகிரிப்பொருள்களுண்ணாமை,
(௪) கொலை பண்ணாமை,
(௫) குருநிந்தை செய்யாமை,

பொய் முதலிய இவ்வைந்து மாபாதகமும் பொருந்தாதிருத்தலே சிறந்த சைவாசாரம். இலாகிரிப்பொருளுண்ணு ஆசாரத்திற் புகைச்சுருட் டுபயோகப் பிடித்தமையுஞ் சேரும்.

(௬) துட்டசகவாச நீத்தல்,
(௭) வைதிகசைவ சாதுசங்க சகவாசம் விரும்பல்,

கல்விச செல்வரைத் தபோதனரைக் கண்டொறுங் காண்டொறும் பொறாமைப் படுவாருஞ் சிவசின்னதாரண முடையாரு மிருப்பர்; அன்னோர்சகவாசமுந் துட்ட சகவாசமாம்; விரும்பற்பாலதன்று.

(௮) வீண் கதைகளைப் படியாதொழிதல்,
(௯) உண்மைக்கு மாறுகோளாம் புத்தகத் திரிபுகளைக் கண்டு மயங்காதிருத்தல்,
(௧௦) எல்லா மனிதர் முன்னும் அன்பாகப் பேசல்,

(௧௧) பிறன்மனைவி யெத்துணைப் பேரழகினளாயினு மவ் ளைத் தாயாக மதித்தல்,

(௧௨) எல்லா மனிதரையுஞ் சகோதரராகப் பாவித்தல்,

(௧௩) எல்லா ருள்ளமுந் தன்னை விழையுமாறு அடங்கி நடத்தல்,

(௧௪) குருலிங்கவாசம் பிறங்க நிற்றல்,

(௧௫) "அளவிலா மறைக ளாகமமு நாடிய" குமரக் கடவுளுடைய செந் தாண்மலர்களை மறவாப் பத்திமை கோடல்

என்றுமிவை. இவற்றுள், ௧ - வது கொலைபண்ணாமை யென்றது தானே ஜீவகாருண்ணிய மெனவும்படும். இக் காருண்ணிய மெய்தின் ஈசுவர பக்தி யுண்டாம். இஃதுண் டாயிற் சிவத்தியானயோக முண்டாம். இஃதுண்டாயிற் சிவானுக்கிரக சிவஞான முண்டாமாகலின் வீடுபேறு விழை வோர் இந்நான்கினையு நன்குணர்ந்து அப்பேறு பற்றக் கடன்மைப்பட்டவரு மாவர். உயிர்களை யுபாதிப்படுத்தல் சாலவுங் கேடாய் முடியு மென்பதையும், ஊனுண்ணும் பொருட்டுக் கோறல்புரிதலு முயிர்க் கொலைதா னென்ப தையும் —

"கங்கையிற் படிந்திட் டாலுங்
கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம்
வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில் லாத ஞான
சாத்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால்பு சிப்போன்
போய்நர கடைவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங்
கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனும்
மனமய லசன்ற னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்
குதவிய கைய னேனும்
இலகிய விரக்க மின்றே
லெழுநர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங்
கூற்றுபே ரமுத மாகுங்
கொலையின னளிக்கு மன்னங்
கூற்றுவல் விடம தாகுங்
கொலையின னுரிக்கு மன்னங்
கொடும்பவ மளிக்கு மென்
கொலைஞர்சம் மனையி லுண்பான்
கொலைஞனே யாவ னன்றே.

இத்திற னருள்ளீசப் பற்றி
யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய லிரக்க மின்றேன்
முத்தியைச் சார்கி லார்சற்
பத்தியால் யோகஞ் சாரும்
யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ்
சீவகா ருண்ய மன்றே."

என்று பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம் பகர்ந்தி
ருந்திவரோடு எமது சிவஞானதேசிகத்து ௨௧ - ஆம் வியாச
மாகிய சீவயாதனு வியாசத்தையும் படிந்த திளிதறிந்து
கொள்க. அது வருமாறு.

எப்பாடையி லெவராலெழுதப்பட்ட புத்தகமாயினும் அதனுள், நல்லன காணப்படின் அவற்றைக் கோடலும் அல்லன காணப்படின் அவற்றை நீத்தலும் உயிர்நலன் விரும்புநர் செய்கையாதலின், தமிழ்மறை வழியாக வடமொழியு மெமது சொந்த பாடையேயெனக் கொண்டு நல்லன கொள்ளாது அம்மொழிவிலக்கிப் பகைபாராட்டு வாரை நேரியா ரிருத்தலும், யாதானுமொரு நூல் உயர்வுடையார் வாக்காகக் காணப்படினும் அந்நூற்கு உலகின்கண் வழங்கி வரூஉம் எழுத்துக்களுஞ் சொற்களும் உபயோகிக்கப்பட்டபடி கதாநுகத நியாயமாக உலகின்கண் வழங்கிவரூஉந் தவறான விடயங்களும் நவீன கற்பனைத் தலபுராணக் கதைகளும் உபயோகிக்கப்பட்டிருக்குமென எண்ணலும், எண்ணியவாறு காணப்படின் அவற்றைக் களைதலும், ஈசுவர சிருட்டியிற் பயிர்செய்வோரும் வர்த்தக மிழைப்போரும் உத்தியோகமுஞற்றுவோரும் கைத்தொழில் புரிவோருங் கூலிவேலை யியற்றுவோருந் தோன்றுதல்போலக் கல்வித்தொழிற் கலைஞர்களுந் தோன்றுவரென எண்ணலும், அப்பயிரிடுவோர் முதலியோருட் பொய்யரு மெய்யருமிருத்தல்போலக் கலைஞர்களுள்ளும் பொய்யரு மெய்யருமிருப்பராதலின் அவர்களுடைய இலிகிதங்களுட் சிலவற்றுட் பொய்யுந் தோன்றுதல் அதிசயமன்றெனவெண்ணலும், இத்திறத்தோர் முன்னுமே யிருந்தார் இக்காலையிரார் இனியும் வாரென்றற்கு மோரியைபின்மையின் இக்காலத்தும் வருங்காலத்துங் காணப்படுவோரேயாவரென எண்ணலும், உண்மையுணர்தலும் "புத்தகத்திரிபுகளைக்கண்டு மயங்காதிருத்தல்" என்றதிற் சேர்ந்தபாலனவாம்.

மேலே கூறிப்போந்த கட்டளைகளை யொருவன கைக்கொண்டு நடந்தால் காளைப்பருவமேயாயின் உத்தமமாகும். மேற்றாயின் மத்திமமாகும். அதினு மேற்றாயின் அதமமாகும். என்னெனின்,— பாவ கருமங்கள் மேன்மேலு மறியாமையால் வளர்தலினாலும், நரைதிரை சோம்பு பெருகிக்கொண்டு வருதலினாலுமென்று மேதுக்களை யெடுத்துக் காட்டுக. சிலர், மூப்பு வந்ததன் பின்னேதான் ஞானாசாரியரை யடுக்கவேண்டுமென்று மொழிவர். அவருக்கு உடம்பினுண்டாய நரை திரையைப் போலக் காமாதி சித்தவிருத்திகள் நரை திரை கொண்டில வாகலின் அவர் கூற்று, நகையுடை நகையின்மேற்று மென்க; மரணம் இன்னபோதென் றில்லாதிருத்தலே யவ ரெண்ணத்தவருமாவரென்க. இந் நியாயம் விளங்கற்பாலதாய்த் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு —

" இன்றுநன்று நாளைநன்
றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப்
போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான்
வெண்மதி விரிபுனற்
கொன்றைதுன்று சென்னியான்
கோடிகாவு சேர்மினே "

என வெழுந்தது. இவ்வாற்றான் விடுதலை விரும்பு விவேக முதிர்ந்தவன்றே மூப்புத் தோன்றிவிட்டதன்று முத்திக்குபாயந்தேட லறிஞர்கடன்மை யுரைவின்றதன்றோ?

ஒருவன், நூல்களைக் கற்றதனால், நூலின் பயனை வாயால் வழங்கலாமேயன்றி யனுபவித்தல் கூடாது. திருவள்ளுவநாயனார்—

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

என்று சொன்னபடி, ஒல்லையி லனுபவத்திற்குக் கொண்டு வருபவனே பலஞானியாவன்; அவனே அறிஞன்.

சரியை, கிரியை, யோகங்களாகு மூன்றாகு பயன்களெல்லா மொருவனுடைய புது மணக்கோல ஆடம்பர மகிழ்ச்சிபோலவும், ஞானப்பயன் அம்மணமகனும் மணமகளும் விவாகோற்சவ சங்கத்தையுஞ் சடங்குகளையும் விட்டகன்று தனித்த இருக்கைக்குட் சென்று இரகசியமாயிருந்து அபிமானமச்ச மென்பவற்று ளொன்றுமின்றி இரகசியமா யனுபவிக்கு மின்பம்போலவு முள்ளன. இவ்வின்பம், சிவான்மா பரமான்மாவைக் கூடி யனுபவிக்கும் பேரின்பமாதலின் அஃதித்தகைத்தென்பதை யனுபவித்த வான்றோரே யறியு மாகலின் அஃதிங்குச் செவ்வனே வோதற் கொண்ணாத தொன்றாகலின் அஃது அநிர்வசனத்தின்கட் படுவதாம்.

பிராணபந்தன (ஹட) அடயோக சித்தியாலும் ஈசுர பத்தியாலும் பலதிறச்சித்திக ளடைவோம். அவை, ஆன்மலாப ஞானிக்கும் வேண்டுமென்பதின்று. திருவள்ளுவ நாயனார்—

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்."

என்று பணித்தபடி அவனுக்குப் பற்றறுதலேவேண்டும். புவனபோக சரீரவாஞ்சையாகிய வெளிப்பற்றும், அந்தக்கரணாதி தத்துவ வாஞ்சையாகிய வுட்பற்று மறுப்பது துறவு மார்க்கத்திலேயே யினிதாகும்.

ஆறாவது

துறவறநிலையியல்

துறவுமார்க்க ஞானம், பொன்னிற் பதித்த இரத்தின மொக்கும். இல்லறமார்க்க ஞானம், இரும்பிற்பதித்த இரத்தின மொக்கும். ஒரு சீவனுக்குத் துறவு நிலை, மறுபிறப்பா யெண்ணப்படுகிற தென்று மாதவாசாரிய ரென்னுந் தவமுடையார்க்கு ஸ்ரீ தேவியார் சொல்லி யருளியது கண்ணுறப்படுதலின் அது, தானநுபவிக்க வென்று தேடிய வினைத்தொகை தன்னைவிட்டு நீங்கச் சாவா மைப்போலத் துறவினு மாகின்றனன்: அவன் பற்றுடை யானல்ல னெனும்பொருள் பயக்கின்றதன்றோ. துற வினைத்தோ ன்றிய மெய்ந்நெறியே நாடும்; மகிழ்வையுமாம். இல்லறத்தோ னிதயம் பல பல நாடும்; மகிழ்வைய மாகாது. இவை இயல்பாறால்.

இந்தத் துறவினை முதன்முறையாக வெளிப்பற் றாகிய உயிர்ச் சார்பு (= உடம்பு) பொருட்சார்பென்னு மிருதிறமு மொழித்துப் புறத்துறவாகவும், இதன்கண் வைத்த அவாவினை அறவேயறுத்து இரண்டா முறையாக இந்திரிய நிக்கிரகம்பண்ணிப் பின்னை முன்னைத்தே முன் னேறியிருக்க வாசனையை யெழாதவாறு நசித்து உட்டுற வாகவுங் கோடல்வேண்டும். பின்னை நனவிற் சுழுத்தி யையெய்தி, மேல் அஞ்ஞான நிவிர்த்தி யாற்றி, மேற் சிவதரிசனஞ்செய்து, மேற்சபைதரிசனம்பண்ணி, மேற் சிவதரிசனஞ்செய்து, மேற் சிவவியல் சிறிதல்லாச் சிவவியலாஞ் சமாதி கூடல்வேண்டும்.

போந்த வெளிப்பற்றைச் சார்ந்த மனைவி மகார் முதலினோர் வாஞ்சையைப் புறப் பற்றென்றுஞ் சரீர வாஞ்சையை இடைப்பற்றென்றுஞ் சிலர் சொல்லுப. அப்படியாயிற் பற்று மூவகையாம்.

உட்பற் றொழித்தோரிற் சிலர்பாற் புறப்பற்றுப் பொருள்களிருத்தலு முண்டு. அது, வேரறுந்த கொடி சில்போது பச்சென்றிருத்தன் மானும். இங்ஙனம், அகப் பற்றாகிய வேரை முதலிற் களைந்துவிடிற் பின்னர்ப் புறப் பற்றாகிய கொடி தானே யுலர்ந்து போமென்றுங் கோடு மெனின்,— அது முறையன்று; முட்களுடைச் செடி யைக் கொடியை முன்னர்க் களைந்து பின்னர் வேரைக் கண்டு களைத லுண்மையின். காமம், வெகுளி, மயக்க மென்னு முக்குற்றங்களை யீங்கு முட்களாக வெண்ணப் படுகின்றன. இல்லறத்திருந்த ஞானிகளாகிய கண்ணன் சனகன் முதலினோர், உற்பத்தியிலேயே முட்களில்லாச் செடியைக் கொடியை யொப்பரென்க. சைதன்னிய சந்தப் பிரமாணந்தமாகிய யானையை யிரையாய்த் தேடும் ஆன்மாவாகிய அரிமா, யானை தப்பிப்போயினும் விட யானந்தமாகிய எலியை யுண்பதின்று; தோலுரியாது பலவின்பழ முண்பதின்று; உய்த்துணர்க. பற்றறுத்து மனம் ஏகாக்கிரப்படத் துறந்த விவேகி யானவன் —

(க) வெள்ளிய கௌபீனமேனும், வெள்ளிய ஆடை யேனும் அழுக்கிலதா யணியக்கடவன். திரு வருட் செயலாற் கல்லாடை கிடைப்பினு மத னைத் தரிப்பவருமுளர்.

(உ) அலங்கார பூடணாதிகளையும், நல்ல வாசனைப் பொருள்களையு மிச்சியா திருக்கக் கடவன்.

(௩) புசிக்கத்தக்க பொருள்களுள் வாய்ந்ததை வாங்கிச் சுவைகருதா துண்ணக் கடவன்.

(௪) ஆயினும், அன்பிலாருடைய அன்னபானாதிகளை யருந்தா திருக்கக் கடவன்

(௫) கறையற்ற பல்லோடு வயங்கக் கடவன்.

(௬) வாய்ப்புடைச் சொல்லன்றி மற்றும் வார்த்தை யொழிந்தவனாய் வாழக் கடவன்.

(௭) தசனம் வெளிப்படக் கனைத்து நகையாதிருக்கக் கடவன்.

(௮) புத்தகங்கள், கடவுளை யுண்டாக்க வரவில்லை; நிச்சயிக்க வந்தன; அவற்றின் பேதத்தால் அக்கடவுளும் பேத விகாரப்படல் யாண்டு மின்றெனுந் தெளிவாற் பாடண்டவாத தருக்கங்கட்குக் காது கொடாதிருக்கக் கடவன்.

(௯) வருணாச்சிரம வுயர்வு பாராட்டுவாரோடுந் தெய்வ நிந்தை செய்வாரோடுஞ் சேராது செல்லக் கடவன்.

(௧௦) ஆசிரியரையும், அடியவராய அறிஞர்களையும், ஆரணிய வாச தவவேடதாரிகளையும் வந்தித்துக் கொள்ளக் கடவன்.

(௧௧) யாவரேனுந் தனக்குச் செய்யும் வந்தனோபசாரங்களைச் சிவப்பிரீதி செய்யக் கடவன். (செய்யாதிருப்பிற் செய்த தவங்குன்றும். தன்னைப் பிறர் வணங்கற் கிடங்கொடாதிருத்தலு நலனே.)

(௧௨) வெப்ப கட்டங்களை யியன்றவளவு பொறுத்துக் கொள்ளக் கடவன்

(௧௩) தரையிற் படுக்கக் கடவன் (அணையிற் படுத்தல் கூடாது.)

(௧௪) ஊணுறக்கங்களைக் குறைத்து யோக நித்திரையா யுறங்கக் கடவன்.

(௧௫) பல்லிடத்தும் பயமிலாது உண்மைக்கா யுலாவக் கடவன்.

(௧௬) பிரேதம் பிழைத்தெழினும் வியப்பென நோக்கா திருக்கக் கடவன்.

(௧௭) பிறர்செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளக் கடவன்.

(௧௮) பெருமையில்லாதவனாயுங் குழவிகள் குணங்காட்டி யிருக்கக் கடவன்.

(௧௯) நான் எனதென்னு மபிமானத்தை யறுக்கக் கடவன். (இவ் வறுத்தலையே துறவென்றுங் கூறலாம்.)

(௨0) செலவு நிகழ்வு வரவென்பன கருதாதவனாயிருக்கக் கடவன்.

(௨௧) பொன்னும் ஓடு மொன்றென மதிக்கு நிருவிகற்ப சிந்தையோடு விளங்கக் கடவன்.

(௨௨) சகலோபாசனையை யிடை யறாது விருத்திக்கக் கடவன்.

(௨௩) தனது சித்தி யுண்டாகு தேவ ரகசியங்களை வீணே வெளிப்படுத்தா திருக்கக் கடவன்.

(௨௪) ஒருதெய்வ வழிபாட்டைத் தன்னுடைய வெண்ணத்தைத் தனித்திருந்தே முடிக்கக் கடவன்

(௪௫) சிவ பரம்பொருளின் திருவடிப்பேறெய்துங் காறும் இத்திறத் துறவுநெறியிலேயே நிற்கக் கடவன்.

கூறிப்போந்த கட்டளைகளுட் ௧௦ - வதாய ஆசிரிய வந்தனம் — ஆசாரிய னடிக்கீழும், உலகத்திலும், எனினும் பொறுத்துக்கோடல், சினவாது நிற்றல் என்னுஞ் சாந்தமும், பரிவுங் கூடிய வந்தப் குணத்தோடும் நிகழத் தக்கது. என்னை? ஏகதேசம் நீக்கிய நிகழ்ச்சிக்குப் பின்னே தான் சிவருடைய உண்மைத்தனம் வெளிப்படுமென்பதூஉம் இவ்வுலகறிந்த உண்மைகளு ளொன்றாகலின். ௨௨ - வதாய ஈசுவரோபாசனையை விருத்திப்ப. எப்படியெனின், — தனக்கு ஞானாசாரியார் போதித்த முறைப்படியே யென்க. அவ்வீசுவரன் மாட்டு நல்ல பிரியமும் மதிப்பும், பிதா பிள்ளையென்னு முறையும் ஆண்டவன் அடிமையென்னு நிலைமையும் மல்கத் தான் வயங்கவேண்டும். ஆண்டே, உள்ளுருக்க காட்டமும் மல்கவேண்டும். தன்னைத் தேடிப் பசு, கதறுவது போற் கதறவும் வேண்டும். தனது பசு நிலைமையை நினைத்து பிதாவே! நீர் என்றுவந்தருள்வதெனப் பெருமூச்செறிய நின்று, மயிர்க்கூச்செறிய என்பு நெக்கு நெக்குருகத் தேம்பித் திகைத்துத் தியானித்து நின்று, எனக்கு கிடைக்குமோவென வுன்னிக் கண்ணீர் ருகுத்து, அது தாரை தாரையாயொழுக அழவும் வேண்டும். அவனது திவ்விய திருநாமத்தையே அடுக்கடி உருவாகச் செபிக்கவும் வேண்டும். நல்ல தோத்திரமாய் வேத வேதாந்த ரசமாய்த் தானும் பாடியவைகளையேனும் பிறர் பாடியவைகளையேனும் விழுவல் பிறக்கப் பாடவும் வேண்டும். அன்னணம் பாடுங்கால் — அதிக சத்தமிட்டேனும். ஆனா

பணம பண்ணியேனும், அன்னியர்செவிக் கினபமா யிருக்க வேண்டுமெனுங் கருத்துக் கொண்டேனும் பாடொண்ணாது. இரக்க வுருக்கங் காட்டித் தெய்வ சன்னிதியிலே திவ்விய விண்ணப்பஞ் செய்தலென இலாலனையாய் விரைவில்லாது பாடவேண்டும். யாரு மில்லாத வொரு தனியிடத்தில் இறைவனை முன்னிலையாக்கிக்கொண்டு பாடுவதாயின், எற்புடைச் சந்தரசம் இனிது பொருந்தப் பாடி வந்திக்கலாம்; என்னை? கேட்போ னிறைவனே யாகலின். (தத்துவராயர்) பாடுகீதையில் —

"உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளு மிறையென்றால்
இலகியவை திகழ்கீதைக் கேன்செய்யா னிறையதனால்
நலமிகுந்த பொருள்வேண்டி னலமிகுபத் தியினோடும்
பலமிகுநற் கீதைகளை யெப்போழுதும் பாடுவோன்."

எனவும், **திருவாசகத்** திருச்சதகத்தில் —

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே."

எனவும் வருவனவும் பிறவுங் கருதுக. இத்தகைய நிட்காம பத்தி விசுவாசத்தினாலே தெய்வகேயங் கிடைப்பதுமன்றி, உண்மையருளும் உண்மை ஞானமும் வாய்க்கும். சிறந்த பத்தி விசுவாசத்தைக் கட்டுவாங்கனென்னும் பெரிய அரசன், இரண்டு நாழிகை புரிதலும் அவனுக்கு வீடுபேறெய்திற் றென்பதும் வேறு சிலருக்கு

மகாஞான மஃதெய்திய தென்பதும் முக்தநூல்களிற் பெறப் படுகின்றமையின், அவ்விக பத்தி விசுவாச சாதனங்கள், துறவறச்செல்வ முள்ளார்க்கு முரியனவேயாம்.

தவத்திற் கங்கமாய்ச் சடையேனுஞ் சிகையேனும் வளர்த்தல் வேண்டும். முண்டிதஞ் செய்துங்கொளினுங் கொளலாம். (சிகையிற் சீப்பிட்டுச் சீவிக் கோடல் கூடாது.) இவ்வங்கப் பயன்பற்றிய மேற்கோள் —

"பத்தர் நான்முறை வேணி பரித்திடில்
ஒத்த வற்றுறு வேணியோவ் வொன்றிற்கு
மெத்து மச்சுவ மேத பலத்தினைச்
சத்தி யம்மவ ருடோறுஞ் சார்தலே.

அண்ட வாணனுக் கன்போடு முண்டிதங்
கொண்ட நீள்சிகை யாயினுங் கொண்டுளோர்
பண்ட குஞ்சர மேத பலத்தினை
ரெண்டி கழ்ந்த தினந்தோறு மெய்துவார்."

எனச் சிவபுண்ணியத்தெளிவின்கண் வரு செய்யுள்களாம். வேணி = சடை. மயிர்வினைஞன்றொழில், துறவியின் றலைமையினைத் தீண்டாதொழித லேற்புடைத்தாகவு மெண்ணப்படுகிறது. தவவேடதாரிக ளாகிய ஈசனடியார் எக்குலத்தவராயினு மவரை வணங்கல் கடன்மையாம்; மாறுபாடிற் றீதாம். இல்லறந் துறவறமெனு மிரண்டற்கு மிது பொதுவே. பஞ்சாக்ஷரப்பதிபசுபாச. விளக்கத்தில் —

"எந்தக் குலத்திற் பிறந்தாலு
மீச னடியார்க் கிழுக்கில்லை
நிந்தை செய்வோர் நரகுறுவார்
நித்த ருணை யையமில்லை

மைந்த ரோடு மனையோடு
மாளா திருந்த நிதியோடும்
எந்தை யடியார் மனங்கலங்கி
லீரே ழுலகுங் கலங்காவோ."

எனவரு செய்யுளும் இங்கே கருதிக் கொளத் தக்கதே. துறவுநிலை நின்றோர்க்கும் அன்னத்தின் பொருட்டு, ஒரு வினைப் பின்றொடர்ந்து போதல் கூடாது. காடி கூழுண்ண நேரினும் அங்ஙனம் விரும்புதல், தவக்குற்றமாம்; சிவச் செயலே பாவிக்கத் தக்கது. நீதிவழுவியெய்து சிவச்செயலை மறந்து எவரையுஞ் சபிக்கொண்ணாது. தவமுடையோ ரங்ஙனஞ் சபிப்பது, சிறுபிள்ளைகள் பாலலீலையிற் குட்டி னவ னிருக்கக் குட்டாதவனை மற்றொருவன் காட்ட அவ னைத் தாக்குவது போல்வதாம். சாபத்தான் அரிய தவமு மழியும். இது —

"கோப மிக்கபோ தேவ ராறுவார்
துறுகு வோர்தமைக் கொடிய நோய்புகும்
சாப மிட்டமோ தவர்க ளாயினோர்
தவலமை மிக்கதத் தவம் முப்பரே."

என்னும் அந்துவசைப்பாணியு பகுதியினும் பெறப் படுகின்றது.

"சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே."

என்ற கூற்றிலே புலகருமுணர்ந்து கடைப்பிடிப்பது நன்கு.

தவம், இனிது நிகழ்செவ்வி மிக்க பசியுற்று துன்ப ளும், மிக்க நித்திரையுற்று உறங்குவதும், பசுனித்திரை புரியாதிருப்பது மொழுக்காம். பிறவித் துன்பத்திற் கஞ்சி னோர்க்கு நித்திரையும் வாராது சிவஞான சமாதி கூடா

தனுசூது உறங்கு நாளெல்லாம், மனிதப்பிறப்பான நாளை களிலும் வாளா கழிவனவா மென்னப்படும். நோய்க் கிடனின்றி யிகாமலும் குறையாமலு முறங்கும் வழக்கத் தினைக் கொண்டிருந்தோன், சித்திரப்போற் கணாசனத் ததை மறவிருந்து தியானயோகம் பயில்வர் காமன் றிலமேனும் வருத்தாது. நித்திரை மிக்கவிடத்துஞ் சமாதி கூடி கிடத்து மனமிறந்தவிருப்பும், பசி மிக்கவிடத்துந் தேக நிக்கிரகஞ் செய்யுமிடத்தும் மனக்களிப்ப யானவிருப்பும், பிறவிப் பிணியை நினைக்குமிடத்தும் வீட்டின்பத்தை நினைக்குமிடத்தும் முறையே அச்சமு மாசையுந் தோன் றவிருப்புங் காமம் பெருக்கற் கிடனின்று. புழுக்கண் மல்கிக் குடையு மல பாண்டமாகிய விந்த யாக்கை, காக்கா ணிக்கு மெய்ப்போது சுகமா மெனவுன்றும் பரமபரிபாக லிலேவம், பெண்ணின்பூஞ்சிலையும் விரும்புவனோ! விரும் பான். காய்க்குள் கருவிலே தத்தி யேறிவிட்ட அணில் கிட்டாது போயினும் அஃததினைக்கண்டு அவாக்கொளல் போலப் பண்டைக் காலத்து மாதவமுடையாருட் சிலர், மாதர்களைக்கூட வியலாவிடினும் அரம்பையாதி யரிவை யரை நோக்கி யுறிஞ்சிருந்து நின்றனர். சிறு பிராயமுடைக் கன்னிகையைப் நோக்கிப் பரிகாசமாக இவள் என் மனை யாட்டி யென்போன், தன் புத்திரியை நோக்கி அன் னனஞ் சொல்லத் துணியானாகலின், அதுவுங் குற்ற மேயாமென்ற தென்பதை யுணர்விலேவ, மகடூ முன் னிலைக்கட் பரிகாச பதங்களை மொழியாதிருத்தலும் ஒழுக்கமன்றோ.

உஜ்ஜயினி நகரத்து வேதியனொருவன், ஸ்ரீ புவ னேசுவரியாலே தராக்ஷரிக்கப்பட்ட ஒரு கனியானது கனை இனை இரு பெண்பனை நீக்குமென் றறிந்து அதனை,

அந்நகரத்திற் கரசனும் வடமொழிக் கவிஞனுமாயுள்ள **பர்த்துருஹரி** யென்பானுக்குக் கொடுக்க; அதனை அவன், தன் பிரியையாய அனங்கசேனையென்னுந் தாசிக்களிப்ப; அவள், தனக்குப் பிரியமுடைய ஒரு குதிரைக்காரனுக்கு நல்க; அவன், தனக்கு மிக்க பிரீதியுடைய ஒரு தாசிக்குதவ; அவள், தனக்கிட்டதனை ஓரிடையனுக்கீய; அவன், சாணமெடுத்துப் பிழைப்பவளுந் தன்பான் மோகம் மிக்குடையளுமான ஓரிடைச்சிக்கு வழங்க; அவள் அதனைத் தனது சாணக்கூடையின்மேல் வைத்துக்கொண்டு அரண்மனைவழியே நடைதருகின்றுழி பர்த்துருஹரி பார்த்து, ஏ இடைச்சி! இக்கனி, நினக்கெவ்வாறு கிடைத்ததென்று புரிந்த பெருவிசாரணையினாற் புருடர்மீது பெண்கள், எத்துணைப் பேரன்புகாட்டியிருப்பினு நம்பத்தக்கவர்களல்லரென நிச்சயித்தது காரணமாகப் பர்த்துருஹரி துறவியாய் ஒருவனத்திற்சென்று வைகித் தவம் புரிந்தனனென்னும் பிரபல சரிதையினை யுள்ளுந்தி யுணர்வோரும் பெண்ணாசையில் வீழ்ந்து கிடக்க நியாயமுண்டுகொலோ!

கற்புடையாளுக்கு இகத்தும் பரத்துஞ் சிறப்புமின்பமும், விபசாரிக்கு இகத்தும் பரத்துமிழிவுந் துன்பமுமாமாறு, நிராசையுடையாருக்கு இகத்தும்பரத்துஞ் சிறப்புமின்பமுங் கூடாவொழுக்கமுடைக் கபட சன்னியாசிகட்கிகத்தும்பரத்து மிழிவுந் துன்பமுமாம். துறவி, உண்பனவு முடுப்பனவுமாம் இருவகைப் பண்டங்களையன்றி வேறெதனையு மேற்றுக்கோடல் கூடாது. பாழ்ங்கோயில் முதலிய விடங்களில் இராக்காலங்களி லிருக்க நேரினும் யாக்கையை யிறைவன்பா லொப்புவித்து, இறைவன் திருவடிமலர் சிந்திக்குந் தியானமொன்றனையே பிடித்துக்

கொள்ள வேண்டும். மனுடர்களாலும் பேய்களாலும் பூதங்களாலுந் தேவர்களாலும் பதிஞானசமாதிக் கிடையூறு சம்பவிக்கினும் விடாப்பிடி பிடித்திருத்தலே முத்திக் குபாயமாம்.

தைத்தியர், இராக்கதர், தேவர், முனிவர், சித்தர், வித்தியாதரர் முதலியோர் அட்டமாசித்திகளையும் ஊர்த்துவ லோக போகங்களையும் எய்தும்பொருட்டுப் பீதி, நேசம், ஆசை, கருவம், அபிமானம், பசி, ராகம் முதலியன மனத்தின்கட் பொருந்தாது நின்று தவமிழைத்து அச்சித்தி முதலியன வெய்தினராயின், அவைகளினு மேம்பட்ட வீட்டின்பமாகிய நித்திய கைவல்லியத்தினை அப்பீதி முதலியன வொழியாதா ரெய்துவது யாண்டு மின்றென்க.

சீவகரணஞ் சிவகரணமாய் விளங்குஞான்றே அருட்டரிசனமாம். அத்தரிசனமே தன்னையுந் தலைவனையுந் தரிசிக்கச் செய்யும்.

சிவஞானதீபத்தை அஞ்ஞானமாகிய அந்தகாரஞ் செறிந்த அகத்துழிப் பிரகாசிக்கச் செய்யுமமையம், ஆசறு படிகம்போன்ற ஆன்மா, சிவஞானநிலையிலே அனுபவ சம்பந்தமா யமுந்தி வியாபியாம். அது, முதலாவது இயற்கண்ணும், ஆறாவது இயற்கண்ணுங் கூறநேர்ந்து முறைநமையோடின் கூறியாயிற்று. நிருவிகற்ப சமாதியென்பதும் இதுவேயாம்.

வ பூரவசு

இராசயோகவியல்.

இனி, இம்பர்க் கிளக்குவதென்னையெனின், பிராணை யர்தன அடயோகத்திற் கெட்டங்கங்க ளுள்ளபடி சிவஞான இராசயோகத்துக்கும் எட்டங்கங்க ளுளவென் பதே. விவரம் :—

(௧) **இயமம்** — விடயங்களின் மனத்தைக் விடாது தடுத்தல்.

(௨) **நியமம்** — ஆன்மாவை அசுத்தப்படுத்தற்காம் விடயாதிகள் தன்கட் டோன்று மாயின், தோன்றிய ஞான்றே யவற்றை நீக்கித் தன்கொள்கையினையே மேற்கோடல்.

(௩) **ஆசனம்** — மனக் குடாதியில்லாமே யெப்படியாயினு மிருபாதிகமான ஓராசனத் திருந்துகொளல். அது, கிடக்கையிலேனும் இருக்கையிலேனுங் கூடும்.

(௪) **பிராணாயாமம்** — இரேசகத்தையும் பூரகத்தையுங் கும்பகத்தாற் றடுத்தல். எப்படி யெனின், — ஒழியக்குரிய கடமாதி தோற்றங்களையிச்சித்து, அவ்விச்சையைத் தன்னகத்தே தங்கவைத்துக் கொண்டு அது நிறைவேறினவென மேன்மேலும் வாயுவைப்போற் சுழலுகின்ற மனத்தை (விருத்தியிலா தொழிக்க) இருதய கமலத்தி லடைத்தல்.

(௫) **பிரத்தியாகாரம்** — புறமுகத்திற் செல்லும் இந்திரியங்களை அந்தர்முகத்திற் றன் மனத்தோடு

சேர்த்தல். அது, இந்திரிய விடயாதிகளாகிய பல
பாணங்கள் மனமாகிய பாடாணத்தின் மீது
குவால் குவலாய் வந்துவீழினும் அஃதசையா
திருக்குமாறு உறுதிப்படுத்தலென எண்ணப்படு
கிறது. விடயாதிகளில் வெறுப் பெய்தினோர்க்கே
இது சாத்தியமாம்.

(சு) **தாரணை** — விடய வாதனையை விகற்பமற நிறுவு
தல். இவ்வாறு நிறுத்தலை கூடவிளத் தியானிக்
கும் இடமெனக் கொள்ளப்படுகிறது.

(எ) **தியானம்** — கடவுளது சொரூபத்தைநாடி நிற்றல்.
இவ்வுண்மைத் தியானத்தை மெய்நப்பெறற்
கேற்புடை யிலியினார், இவ்வுலகென்பதொரு
சிறிது மின்று; பரம்பொருள் யாண்டும் நிறைந்த
சிதாகாச சொரூபமாயுள்ளதென்று மொரு நிச்சயஞ்
செய்து அவ்வாறு பாவிக்கும் உபாயமாகிய தியா
னத்தைத் தொடல்வேண்டும். இறைவனை ஆசா
ரியனாக வெளிப்பட்டவைத் தனுக்கிரகித்தல் சால்
புடைத்தாகலின் செவ்வேட் பாலனுருவை அகத்
தேனும் எதிர் முகத்தேனும் பாவித்திருத்தலும்
சண்டுக் கூடும். இத்தகைத் தியானமெல்லாம் பிர
மோபாசனை யெனப்படுஞ் சிவோபாசனையாம்.
பசுவின் பாண்மடியிற் கையிட் டிழுக்கும்போது
பாலிறங்குதலும் இழாதபோது அஃதிறங்காமை
யுங் கண்டவாறு இத் தியானசாரியமும் மெண்ணப்
படுகிறது. அவ்விழுப்பினை யாவர்புரியினும் அவர்,
பாலைக்காண்பரால்? இதனையுய்த்துணர்க.

(அ) **சமாதி** — யானென்பதும் புறமென்பதுமின்றி

யாண்டுஞ் செறிந்துள்ள சிவச்சோதியி லழுந்திச் சமமாய் நிற்றல்.

இவ்விவரம் —

" காமா திகளைக் கைவிட லியமம்
விட்ட பொருள்களை மேவிடிற் றள்ளி
நிற்குத னியம நிருபா திகமாய்
ஓரா தனத்தி லுறைகுத லாதனம்
நாமரு பத்தை நாடு மனத்தை
இருதய மதனி லிருக்கப் புகுத்தல்
பிராண யாமம் புறவிட யத்தைப்
பெயர்த்துளே மீட்டல் பிரத்தியா காரம்
விடய வாதனை யைய விகற்பற நிறுத்தல்
தாரணை யாகுந் தற்சொரூ பத்தை
நாட றியான நவிற்றிடு புறமும்
உள்ளு மறவவ் வொளிதா னேயாய்
ஒத்துநின் றிடலே யோங்கிய சமாதி
ஆதலி னிந்த வட்டயோ கமதும்
பிரமசித்தி பெறுதற் கங்கம்."

என்னும் **குமாரதேவர்** பிரமசித்திச்சூத்திரங்களானும் பெறலாம். அங்கம் எட்டனுள் முன்னுறுகல் ஏழினையாய்க் கொண்டவற்றைச் சவிகற்பமென்றும், இறுதியினின்றதை நிருவிகற்ப மென்றுங் கூறுப. சவிகற்பமே நிருவிகற்பத்தைத் தருந்தகைய தென வெண்ணப்படுகிறது.

நிருவிகற்பம் வாய்க்குமுன் ஒருவன், நானே பிரம மென்று சொன்னாலும், எண்ணினாலும் அந்நிருவிகற்பத்தி லொரு சிறிதும் அவன் பெறுது தூர்க்கதியே யடைவன். இது பற்றித் **தாயுமான சுவாமிகள்** கூறியதும் மேலே யெடுத்துரைத்தது. இவ்வொழுக்கு புலங்கொளை வறியாது நானே

பிரம்மமென் றருளிலா தழிந்தது கெட்டவர், ஒருவரல்லர்; இருவரல்லர்; நூற்றுவரல்லர்; ஆயிரவரல்லர்; அனேக ரென்றே கூறல் வேண்டும். கூறிப்போந்த வட்டாங்கத்துள்ளுஞ் சிவஞான இராசயோகத்துக்கு முக்கியமாக வெடுத்துக் கொள்ளப்படுபவை, தாரணை, தியானம், சமாதி என்னு மூன்றுமேயாம். அவற்றுள் தாரணையுந் தியானமுமாகிய இவ்விரண்டும் அகத்தும் புறத்துஞ் செய்யலாம். சிவஞான இராசயோகம் உட்புலத்தே செய்யத்தக்கது. வெளி வேலை புரியுங்காலத்துஞ் சித்தத்தின் அரைக் கூறு ஆண்டிருத்தல் வேண்டும். இப்பூசை, யாண்டு மெஞ்ஞான்றும் நிகழ்வதாகலின் இதனையுடையான், "ஒரு கோயிலிலே ஒரு காலத்தே சிறு வழிபாடு செய்வாரைப் போல்வா னல்லாத பெரியனாகலின் இவனுக்கே கோயில் எங்குமுளதாம்.

தியான பலன்.

ஏழாவதங்கமா யியம்பப்பட்ட தியானத்தை, சிந்தை மருவு மடவோனுஞ் செய்யினும் அத்தியான காலம் — பதின்மூன்றிமையாயிற் கோதான பலனையும், நூறிமையாயின் ஆயிர மசுவமேத பலனையும், அரைக்கடிகையாயின் இலக்க மசுவமேத பலனையும், ஒரு கடிகையாயின் இராசசூயயாக பலனையும், பதினைந்து கடிகையாயின் "இலக்க மிராச சூயயாக பலனையும், ஒரு நாளாயிற் பரமப்பிரகாசத்தி லமர்தலையும் அவனடைவன்.

"திகழாத் தமதத் தவத்தினுயர்
தியான முபகா ரங்களோரறி
நிகழ்பூ சனையா மிவ்வழியா
லன்றிப் பிறிதோர் கேதியதனுந்

புகழ்மெய் யுணர்வு கிடையாது
புரண தியான பூசையினை
யிகழ்மூ டர்கள்செய் யினும்பதின்மூன்
றிமைப்பிற் பசுவீந் துளபேறும்.

இயலீரா் கடவு ளாந்தன்னை
யிமை நூறளவும் பூசிக்கி
லயமே தத்தி லாயிரமாம்
பேறு மறைநர றிசைப்பூசை
முயல்வா ரிலக்க மயமேநல்
பயனைப் பெறுவர் முறைமையினற்
பயனுர் பூசை யோருகடிகை
பண்ணில் ராச சூயபலம்.

பாச மின்றி யுள்ளுணர் வைப்
பதினைங் கடிகை பூசிக்கில்
ராச சூய விலக்கரிக
ரிவ்வா ளெருநா ளதுச்சிக்கி
லாசி லாத பரவொளியி
லமர லாகு மிதுதானே
யேசில் பரம யோகமிது
தானே பரம கிரியையுமே.”

என வாசிட்டத்துத் தேவபூசைக்கதையில்வரு செய்யுள்கள் இங்கே சிந்திக்கற்பாலன. இவற்றுள் “இவ்வழியா லன்றிப் பிறிதோர் நெறியதனாற் புகழ் மெய்யுணர்வு கிடையாது” என்பது உய்த்துணரத் தக்கதால்.

சமாதியி னிற்குநிலை.

போக காண்ட தத்துவம் எழுநூன், மாயையைச் சிவதத்துவமும், கலை காலம் நியதி ஆகிய இவைகளைச் சத்தி தத்துவமும், அராகத்தை சதாசிவதத்துவமும், புருட

லைச் சாதாக்கிய தத்துவமும், வித்தையைச் சுத்தவித்தையுந் தூண்ட; பிரேரக காண்ட தத்துவம் ஐந்தனுள் ஈசுர தத்துவத்தை இச்சா சத்தியும், சாதாக்கியம் சத்தி என்பவைகளைக் கிரியா சத்தியும், சுத்தவித்தை சிவதத்துவம் என்பவைகளை ஞானசத்தியுந் தூண்ட; காரணங்களை அக்கரங்களும், அக்கரங்களை மூர்த்திகளும், மூர்த்திகளை மேலே கிளக்கப்போந்த இச்சா ஞானக் கிரியைகளுந் தூண்ட உயிர்பக்க முன்னூன்றித் தத்துவங்கள் தாமேவந்து ஆன்மாவைப் பொருந்துதலும் ஆன்மா தானே வந்து தத்துவங்களைப் பொருந்துதலும் இலவாகலின், திருவருளை சுதந்திரப் பொருளெனக்கண்டு தனக்கொரு சுதந்திரமு மின்றி நேயத்தழுந்தி நிற்க வேண்டும். தத்துவ விசாரத்தின் பெரும்பயன், சுதந்திரமின்மை யெனவுங் காட்டப்படல் காண்க.

சிவஞான இராசயோகம் யாவர்க்கும் பொது.

1. மேற்கூறப்பட்ட எட்டங்கத்துள்ளே தாரணை, தியானம், சமாதியாகிய மூன்றினையு முக்கியமாகக் கொண்டுள்ள இந்த இராசயோகம், துறவறத்தும் இல்லறத்துமுள்ள ஆண் பெண் ணென்னும் இரு பாலார்க்கும் பொதுவதாகவும் எண்ணப்படுகிறது. இதற்கு உலக விடயங்களை முதலிற் சுருக்குதல் வேண்டும். அங்ஙனமாயின், சுத்தி செய்யப்பட்ட செம்பிற் களிம்பூறுதல் போல, ஆன்மா விடயங்களோடே கூடுதலும் பந்தமேருது திடஞானாகாரமாய்ப் பின்னறைப் பிரகாசித்தல் கூடும்.

2. ஈண்டுத் தீக்ஷை செய்யப்பட்டு இராசயோக நிட்டையி னிருத்தப்பட்ட மேனியிற் புயத்திற்குக் கீழ்ப்பட்ட பாகம் ஆவிடையாகவும், மேற்பட்டபாகம் இலிங்கமாகவும்.

மதிக்கப்படும். இலிங்கத்தின் அடி, இதயத்தானமாவுங் கொள்ளப்படும். சூக்குமலிங்கம் ஆன்மா; அஃது இதய தாமரை மலரினடுவே தீபாகாரமாக மிளிர்வது. இதனைத் திருமேனியாகக்கொண்டு நிற்போன் குகனாகிய சிவன்.

எட்டாவது

முத்திலக்கணவியல்

முத்தியில் உருவச்சித்தி, அருவச்சித்தி, உருவருவச் சித்தியென மூவகை மொழியப்படும். அவற்றுள், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாளுமேறுங் கரி பரி யூர்ந்து கைலைக் கெழுந்தருளியது உருவச்சித்தி யெனவும், மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பர சிற்சபைக் கண்ணே* திருமேனியுடன் மறைந்தது அருவச்சித்தி யெனவும், திருஞானசம்பந்த சுவாமிகளும் முருக நாயனார் முதலிய பெரியோர்களும் பரஞ்சோதியுட் புக்கதுந் திருநாவுக்கரசு சுவாமிகள் சிவலிங்கத்துட் சென்று மறைந்ததுந் திருவெண்காட்டடிகள் தமது திருமேனியைச் சிவலிங்கமாக நிறுவியதும் உருவருவச் சித்தியெனவுங் கூறுப.

நக்ஷத்திரபதவிகளு முளவெனல் புலப்படுகிற தென்னும், அப்புலப்படுதல் சத்த இருடி மண்டல மென்பதிற் றெழுக்கின் மிளிர்வது மரீசி யெனவும், இவருக்கு மேற்கிற் சிறிது தாழ்ந்து நின்று சுடர்வது அருந்ததியோடுங் கூடிய வசிட்ட ரெனவும், இவருக்கு மேற்கிற் சிறிதுயர்ந்து நின் றிலகுவது அங்கிர செனவும், இவருக் கண்ணிதான

மேற்கிலுள்ள நான்களில் வடகிழக்கில் வயங்குவது **அத்திரி** யெனவும், இவருக்குத் தெற்கி லொளிர்வது **புலத்திய** ரெனவும், இவருக்கு மேற்கி லொளிசெய்வது **புலக** ரெனவும், இவருக்கு வடமேற்கி லவிர்வது **கிரது** வெனவு மறியப்படு மாற்றான் கூறப்படுகின்றதென்றுங் கழறுப.

இவ்விதமுடிபும், அநுபவமும் உள்ளது உள்ள படியாயுள்ள அநாதிசித்திய வைதிக சைவ சமயத்திலே பெரும்பாலுங் காணப்பட்டமையினாலே தான் அதனை விசேடமென்று கூற விவேகிக ளொருப்படுகின்றனர். இச்சமயக் கடவுளாய சிவபெருமானுடைய உபாங்க சாங் கங்களும், வேதாகம நெறி வழிபாடுகளுஞ் சீவர்களுடைய நிட்காம கன்மங்களும் மோக்ஷத்துக்குரிய சாதனங்களாகவே காணப்படுகின்றன. சாங்கம் = கரசரணாதி அவயவம். உபாங்கம் = புறவங்கம், அணியப்படுவது. இவற்றுள் —

சருவோன்னதத்திலே சிரமெனவும், ஞானாகார வெளியிலே கண்களெனவும், தேவர்முதலிய சீவர்களுடைய துக்கக் கிரகிப் புணர்ச்சியிலே கழுத்தெனவும், சருவ ஞானத்திலே இதயமெனவும், சருவகாரண காரணத்திலே நாபியெனவும், சருவ சாமர்த்தியத்திலே கரங்களெனவும், சருவ கிரியையும் ஞானமும் பாதங்களெனவும் அவை கனிட்ட பாதாளத் தைக் கடந்துஞ் சென்றிருக்குமெனவு நிச்சயிக்கப்படும். அபயகரம் — "நீ அஞ்சேல்" என்பதையும், வரதகரம் — எந்திருவடி "உனக்குத் தஞ்சம்" என்பதையும் நம்பி னோர்க்கு இச்சிவன் அறிவிப்போனென்பதை யுணர்த்த வுள்ளன. திருக்கரங்களிலுள்ள ஆயுதங்க ளென். —

மூவிலைச் சூலம் — இச்சை ஞானம் கிரியை யென்னுஞ் சத்திகள் உலகவெற்றிக் குறியனவாய் எம் மையத்துள்ளன வென்பதையும்,

பாசம் — உயிர்களாகிய பசுக்களை வினைவழியே யாத்து வைத்தலும், யாப்பவிழ்த்து விடுதலை செய்தலுமாகிய இரண்டும் எம்மாட்டுள்ளன வென்பதையும்; [பாசம் = கயிறு]

மழு — மலமாகிய பூச்சிகளைத் தகிக்கு ஞானாக்கினியும், பிரளய காலாக்கினியுமாகிய இரண்டும் எங்கையிலுள வென்பதையும்,

பாசு, கட்கம், வச்சிரம் } முதலியன — தீராப்பகை வெற்றிப்பாடு எம்மாலாதற்பால தென்பதையும்,

கண்டை, தமருகம் } என்னும் இரண்டும் — மந்திரங்கட்கும் அக்கர முதலிய வற்றிற்குங் காரணமாயுள்ள நாதத்தை வெளியிடுதற்றுப் பிரபஞ்ச சிருட்டி யெம்முடைய தென்பதையும் ...

இச்சிவ னறிவிப்பவருயுள னென்பதை யுணர்த்துவன. காரணப் பொருள்களாவன. —

சந்திரகண்டம் — சொல்லிறந்த நிலையாம் விண்ணே இச்சிவனுக்குச் சென்னி; அமுதகிரணமூலமு மிங்குள தென்பனவற்றையும்,

கங்கை — பாவ நிவாரணை பரிசுத்தப் பிரவாகசத்தி இத்தேவன்கணுள தென்பதையும்,

யானையுரி — திரோதான சத்தியுடையவனாக் கரியதிற ஆணவம் இக்கருத்தாவினாற் பீறப்படும்

பிறப்பாடுமை அஃதச்சத்தியால் ஆனந்தமயமேயா
மென்பனவற்றையும், இப்பொருண் முடிவில் வைத்
தெண்ணத்தக்க புலியூர் குருநாருண கிக்கிரகத்தை
யும்,

சிறுமான் — சாந்த வடிவு காட்டி வஞ்சிக்கவரு தந்திர
சூலமும் இத்தலைவனு லறிந்தடக்கப்படும்; உயர்
திணையல்லாத அஃறிணை யுயிர்களும் முச்சிவனு
னுய்திபெறு மென்பனவற்றையும், [மானென மாரீ
சன்செய்கை யீண்டுக் கருதற்பாலது]

அரவம் — அரவ வடிவாய குண்டலினியென்னும் பிர
ணைவ யாபாசத்தி நுய் பிராண்வயத் துளது; அர
வம்போற் சீறியெழு குரோதசத்தியாற் சிவயோ
கிக்கு இடைத்தனின் றென்பனவற்றையும்,

கங்காளம்,
தலைக்கோலம் } என்பன — எத்தேவ ரழிந்துபோயி
னும் இவ்விறைவன் அழியாதிருப்பன்;
அறுதி தத்துவ வுண்மை யிங்ஙனங் காணப்படுகிற
தென்பனவற்றையும்,

வில்வம்,
வெண்ணெருக்கு,
ஆத்தி,
மத்தம் } முதலியன — உலகவாசனை நீத்திருத்
தலே சிவப்பே றென்பதையும், [வில்
வம் முதலியன மணமில்பொருள்கள்]

பஸ்மம் = திருநீறு — மல மாயைகளை நீற்றித் தன்
வயப் படுத்தியருண் ஞானி இச் சிவனே யென்
பதையும்

மசானத்தும் இச் சிவபெருமா னிருக்குமிடம் "மயான
மெனபதற்குப்பொருள்; மாயை மமதை அகங்காரங்களை

ஞானக்கினியினலே தகித்தரு ளினலக்களமே யென்பது நீர்வாணேபநிஷத் வாயிலாக வறியப்படும். திரு ஞானசம்பந்த சுவாமிகள் —

" பேய்கள் பாடப்பல் பூதங்க
  டுதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கோ டோளிதான் வெள் கிட
  மாகட மாடுவித் தகனுரோன்
சாய்க டான்மிக வுடையதன்
  மறையவர் தருசிர புரத்தார்தாங்
தாய்க ளாயினர் பல்லுயிர்க்
  குந்தமைத் தொழுமவர் தளாராரே."

என்றருளிச் செய்ததும் அம்பலமாயினாக கிருத்தியமாகிய அழிப்புத்தொழிலை வருணனை முகத்தானை யுணர்த்துவ தாயிற்று. சண்டு,

" கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட மினவுண்டிகை முரல
அரியாடிய கண்ணுளொடு மண்ணுமலை யதுவே."

என அச்சுவாமிக ளருளிச்செய்ததும் அத்திற வருணனை யுடையது தானே? என வினவின், — ஆம் என்பது விடையாம். என்னை? " ஆலைமலிபுகைபோ யண்டர் வானத்தை, மூடிநல்ல — மாலையது செய்யும் புகலிப்பதி யாமே "; " அன்னல் வினைகழனி யழகார்விரைத் தாமரை மேலன்னம் — புன்னினம் வைகியெழும் புகலிப்பதி

(மாயாமமதாஹங்காரதஹகம்சமசாகே!) [illegible]

" மாயாமமதாஹங்காரதஹகம்சமசாகே! "

தானே." "தாவும் மறிமானொடு தண்மதியம் — மேவும் பொழில் சூழ் வெணுபுரமே" "செல்வ நெடுமாடஞ் சென்றுசே ணோங்கிச் — செல்வ மதி தோயச் செல்வ முயர்கின்ற — செல்வர் வாழ்தில்லை" என, அத் **திருஞானசம்பந்த சுவாமிகளும்,** "கெய்தற் குருகு தன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச் சென்று — கைதை மடற் புல்கு தென்கழிப் பாலை" எனத் **திருநாவுக்கரசு சுவாமிகளுந்** தலவருணனை செய்தார்க ளாக லின். இன்னும் இவ்வருணனையை,

"கல்லறை கன்றபே ரகழி
யுழக்கிய கரிகள்
தல்லைந் தாமரைத் தாளெனத்
தடக்கையாற் பிடித்தில்
நல்லுஞ் சேடனை யெடுத்ததன்
சுடிகையி னுறு
உல்லவி லங்கொளிர் மணியினு
லூற்றையேயென் றெறியும்."

என்னு **நைடதத்து** நகரப்படலச் செய்யுளினு மறியப்பெற லாம். இதன்பொருள் :—"(யாவின்ற நகரத்து) இடம் பரந்த பெரிய அகழியினைக் கலக்கின்ற யானைகள், பாதாளத்தில் வசிக்கின்ற ஆதிசேடன் முதலிய பாம்பு களைத் தாமரையினுடைய தாளென வெண்ணித் தந் துதிக்கைகளான் அவற்றை யெடுத்து மேலே கொண்டுவந்து (நோக்கியபோது) அவற்றின் உச்சியின்கண் உள்ளிருந்து மேலெழுந்து தோன்றியுள்ள இரத்தினங்களின் ஒளிருந் தன்மையினாதல் இவைகள் கடைக்கொள்ளியே யென் றஞ்சி *அவற்றைப் புறம்போக வெறியும்" எனவாம். இவ்வாற்றான் வருணனை, உண்மையில்லைத் தன்மைப்

படாக் கற்பனை அலங்காரமென்பது தெளிதனன்றோ இவ்வாறே அந்த ஞானக்கினி மயானம்பற்றிக் கூறியன வும் எண்ணப்படும்; அவ்வருணனை முறையும் அவ்வாறே செய்யத்தக்கது; யாதானுமொன்றைச் சிறப்பித்தேனும் வேறுபடுத்தேனும் வருணனை விரவுங் கற்பிக்குதால் அணியிலக்கண மெனப்படுகின்றதால் என்க. இடபம், தருமதேவதையின் சொரூபமாம். கபாலம், மகா கோர உக்கிர சௌரிய கௌரவ பைரவர் கரத்துளதாம். நிற்க.

ஸ்ரீ பரமபதியினுடைய நித்திய கைலாச வாசத்தோடுங் கூடிய முனீசுவரர்களையும் என்றும் முத்தர்களெனவு மெண்ணுக.

காயகற்பங்களை யுட்கொண்டு தேறிப்படுத்தலாய தூல தேகமும் ஓரளவையுந் தழியுமாதலின், அத்திரத்த தூலத் தைச் சூக்குமத்தில் இலயஞ்செய்வான் பிராணபந்தன யோகத்திலமர்ந்து சிவசத்தி பீஜமந்திரங்களை யுச்சரித்து அமுதமுண்போருடம்பு மகா காந்திமிக்க இலங்கி மருள் வடிவோர் கண்ணுக்குப் புலப்படாது மறைந்துலாவுமென் றும், இதனைச் சீவன்முத்திவடிவென்றும், தேவதேக மென்றுங் கூறலாமென்ப. இதுவுஞ் சனன மரணங்கட் குட்படா வுடம்பென நிச்சயிக்கப்படுகிறது.

இவ்வித முத்தி சித்திகளைத் தவக்குறைவாற் பெறு துடம்புவிட்ட சீவான்மாவும், சுவர்க்காதி போகங்களை யனுபவித்து இரண்டொரு பிறப்பில் எம்பரா யிருப்பி னும் இயம்பற்கரிய விதேக முத்தியினை அடையுமெனல் கொளக்கிடக்கின்றது. இதனை,

"முதலாம் யோக பூமியிலே
மூவைக்கு மிரண்டா வதின்மலதுக்

தனையு மூன்று வதிற்பலிக்குந்
தனியா ரிமனுந் திறம்யோகி
இதனி லிறந்த னேடுங்கால
மிருந்து சுத்த சங்கற்பத்
துதவு போகங் களையருந்தி
யோகி யாய்மீண் டுற்பவிப்பான் "

என்னும் வாசிட்ட திருவாணைப் பிரகரணச் செய்யுளு முணர்த்துவதாயுள தாதலின், சிவஞானாப்பியாசத் திருக்க வேண்டு மென்றே அறிஞர்கள் முயற்சிக்கக் கடன்மைப் பட் டிருக்கிறார்கள். உடம்பு விட்டவுடனேயும் முத்தி யடைத லுண்டென்று ஏனாதி நாயனார், மெய்ப்பொரு ணாயனார், சதிசிமுனிவர், தாயுமானசுவாமிகள் முதலிய பெரியோர்கள் பலருஞ் சான்றாயுள்ளார். சீவன் இருளி லிருக்குங்கால் உருவும் இருளாம். மருளிலிருக்குங்கால் உருவும் மருளாம். ஒலியிலிருக்குங்கால் உருவும் ஓமாம். அருளிலிருக்குங்கால் அருளாம்.

மருண்மாயை வடிவே உருவம். இதற்குணவு பிரத்தியக்ஷம். ஓம் வடிவே உருவருவம். இதற்குணவு உளத்தே உருகிமாத்திரம். அருளே அருவம். இதற்கிடு முபசார மெல்லாந் திருத்தி மாத்திரமாம். பிரத்தியக்ஷவுணவு சீவர்கட்கும், உருகி மாத்திரவுணவு சீவன்முத்தர்கட்கும் உரியனவாம். அதீத வுணவு, அதீத மயமேயாம். பிரத்தியக்ஷவுணவாற் பெருக்குந் தேகம் அவ்வுணவுபோ லழியும். உருகிமாத்திரவுணவுடையார் தேகம் அன்னண மழியாது.

கருப்பாசயத்திருக்கின்ற குழவிக்குத் தாயருந்திய வுணவின் சாரத்தால் யாக்கை, பொறி, புலம் என்பவை நிறைவா வளர்ந்து அது வெளி வந்தபின்னர் தாயையும்

புளிப்பு மிகும். அப்புளிப்பு, பிரபஞ்ச விடயானந்தத்தி லுழலச் செய்வதாயிற்று. மேலும், பெண் கலவியின் பலத்துக்காகப் பலவித சார பதார்த்தங்க ளுண்ணப்படு மாற்றான் அது விருத்தியாதலு முண்டு. இவ்வேதுக் களால், உண்ணுமுணவான் முக்குண விகற்பங்களும் விருத்தியாதலை யறியலாம். அவற்றுட் சாத்துவிக குணமே அறிவுடைச் சுத்தாவத்தையைத் தரும். உணவைச் சிறுத் துண்ணின் விடய வாசனைகள் சிறுக்கும்; சுத்தாவத்தை பெருக்கும். உணவைப் பெருக்கலான் மத்தமும், விந்துவும், உறக்கமும், சில நோயும் மிகும். மத்தம் மிகுதலி னான் ஆசனத்தின்கட் செவ்வே யிருத்தல் கூடாது. விந்து மிகுதலினான் மனத்தின்கட் காமமோங்கு மதனால் அம்மனம் அசைவற நில்லாது. நோய் மிகுதலினாற் சமாதிமுயற்சி கூடாது. உறக்கம் மிகுதலினாற் கேவலம்வந் தடையும்.

ஒரு சேர் அரிசிக் குட்பட்ட சோறே யுண்ணல் வேண்டும். வாழைக்கனியோடு நற்பசுவின்பாலை யுண்டு கொண்டே வருவதாயினுஞ் சாத்துவிககுண முண்டாம். ஆனால், விந்து மிகும்படி அதிகமாகக் கொள்ளொண் ணாது. கடினமும் உறைப்புமுள்ள பொருளனைத்தும் இராசச குணமாம். மாமிசந் தாமச குணமாம்.

காலையிலுண்ணுந் தாமசகுணப் பழஞ்சோற்றையும் மாலையி லுண்ணும் இராசசகுணப் புதுச்சோற்றையுந் தள்ளி உச்சிக்காலத்தி லுண்ணுஞ் சத்துவகுணப் புசிப் பினையே யுண்பார், சுத்தாவத்தையினைப் பொருந்துவர். இடம் பொருள் ஏவலில்லாதார், உச்சிக்காலத்தில் வெளிப்

சேர் = கசச00 நெல்லெடை

படுகின்ற நல்லாரிடு பயித்தத்தைக் கை நிறைய வாங்கிப் புசிக்கலாம். உப்பையும் புளியையு நீத்தலு நலம். முதலில் உட்புலத்தே ஓரிடத்தே மனத்தினை நிறுத்துஞ் சவிகற்பமும், பின்பு நிருவிகற்பமுமாகு நிட்டையினைக் கூடல் வேண்டும். அதன்றாது தோன்றாமலுந் தோன்றிய தகவாமலு மிருத்தல்வேண்டும்.

இருளவத்தையில் இருளாயிருந்து பின்னர் விழிப்பெய்துமாறே அருளவத்தையில் அருளாயிருந்து பின்னர் விழிப்பெய்தும். இருளவத்தை தாமசமாகும்; விழிப்பு இராசசமாகும். அருளவத்தை சாத்துவிகமாகும்; விழிப்புஞ் சாத்துவிக இராசசமாகும். சாத்துவிக விருத்தியினாலேயே நிட்டை இலபிக்கும். இன்றேற் சீவன் சகல கேவலப் பட்டு மருளாயிருக்கும். ஈசுவரானுக்கிரக யோக்கியமுடைய அந்தச் சாத்துவிக சுத்தாவத்தையன்றிப் பிற முயற்சிகளாற் சீவன், முத்தியும் பெறாது.

அருவ அருளான்மா, பிறர்விழிப்புலமாகா திலகும். உருவ மருளான்மா, பிறர்விழிப்புலமாய் உடலிற் பந்தப்பட்டிலகும். ஓம் வடிவான்மா உடலிற் பந்தப்படாது பிறர் விழிப்புல மாத்திரையா யிலகும். சிவானுக்கிரகத்தால் அவ்வோங்கார வடிவுபெற்ற சீவன்முத்தன், உலகத்தையுணவா னொருவன் கண்ணுற்ற பொருளைக் கனவிற்கண்டு பொய்யென்றிருத்தல் கடுப்ப உலகத்தைக் காட்சி மாத்திரையாய்க் காண்பவனவனேயன்றி வியவகாரப் பீடிதனாகான். கனவுகாண் செவ்வி, இது கனவேயென்று சொப்பன சாக்கிர மத்தியிலிருந்து பார்ப்பவனைப்போன்று அருளுக்கு மருளுக்கும் இடையே அந்தப் பிரணவவடிவ சீவன்முத்தனானவழி நின்று சகத்தையுங் காண்பன்; சிவத்தையுங் காண்பன். கட்புலமொடுள்ள இவனுடைய

வடிவம், வறுத்தவிதை போல்வதாமென மதிக்கப்படுகிறது. இக்கீரவர், விண்ணுறை சிரிய விபுதர்க்கு மேலாய் முச்சுடர்போலுஞ் சுத்தாங்கராய், அமுதங் கிட்டுங் காலுஞ் சமயிக ளுபசரித் தளிப்பனவற்றை யுண்பவராய், அன்னியச்சத்தமும், அன்னிய உருவமும், அன்னிய பரிசமும், அன்னிய இரசமும், அன்னிய வாசனையும், அன்னிய நினைவும், அன்னிய நேயமும், அன்னிய ஈடமும், அன்னியபார்வையி லேற்புதும், அன்னிய கிரியைகளுமின்றி மனிதவுருவாய்ச் சிலர்கட் கனுக்கிரகிக்க நிமித்தஞ் சின்னாளிருந்து பின்பு பரமுத்தியினை யடைவர். பெத்த நிலையில் யாவுஞ் சகமாகவே காணப்படும். முத்த நிலையில் யாவும் பரமாகவே காணப்படும்.

சீவன் முத்தித்தன்மை பெறாப் பெத்தனுக்கு மனம் உருவமாகவும், அம்முத்தனுக்கு அஃதருவமாகவு மிருக்கும். விதேக முத்தனுக்கு அவ்விரண்டு மில்லையாம்.

புலன்களின் வழியே கிரகிக்கப்பட்ட பல வஸ்துககளினினைப்பே மனத்துக்கு உருவம். அம்மனம் விடயாதிகளைப் பற்றிக்கொண்டிருத்தல் அசுத்த வாசனை. இதனாலேயே சரா சரண சனன முண்டாம். இந்த வாசனை யறநீங்கிய வாசனாக்ஷய முண்டாகிச் சுத்தவாசனை பிரசன்னமாவதே பிரமானந்த சீவன்முத்தியினை, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய ஆன்மா அடைப்பதாகும்.

இன்ப துன்பங்களால் அணுப்பரிமாணமு மசையாது சுத்த வாசனையைப் பெற்றிருத்தலே மனத்தி னருவமாகமென வெண்ணப்படுகிறது. முதலின் மடிந்த இராசச தாமசங்களோடு சாத்துவிகமு மிறப்பதே மனத்தி னருவகாசமென வெண்ணப்படுகிறது இத்தகையே விதேக

முத்தி யென்றுங் கூறலாம். உயிருடம் பொழிதலும் ஈசுவரவுடம் பெய்துதலை விதேகமுத்தி யென்றுங் உரைத் துப. விதேகம் = தேக மின்மை. சிவலிங்கத்தில் ஐக்கியமாதல் போலத் தடத்தலக்கண சிவன் றிருமேனியில் ஐக்கியமாதலைச் சிவசாயுச்சிய மென்றும், உடம்பு விட்டவுடன் எங்கணும் பராய ஆகாயம்போல யாண்டுமுள்ள சொரூபலக்கண சிவத்தில் இலயமடைதலைச் சாயுச்சிய மென்றுஞ் சொல்லுப. இந்த இலயத்தின் முந்தான்மா வண்டெனினும் இன்றெனினும் ஆகேடிப முண்டு. மோனத்திற்குப் பின்னைதான் ஞானமும் வீடுமாதலின், வாக்கு மனமென்பவற்றிற் கெட்டா வொரு மோனத்தி னிருத்தலை முடிவெனல் சாலும்.

எண்பதாவது

இராசயோகாப்பியாசவியல்

முத்தியின்ப மார்க்கமாயுள்ள சிவஞான இராசயோகம் எவ்வாறு சித்திக்கு மெனின், — மனமும் அதன் வாசனையும் வித்தும் முளையுமென்னும் "பீஜாங்குர நியாயம்" என்பதில்வைத் தெண்ணப்படுகின்றன வாகலின் மனத்தை நசித்தால் வாசனையும், வாசனையை நசித்தால் மனமுந் தழையா தடங்கு மென்னும் அநுபவ நிருணயத் தின்படி ஐம் பொறிகளாலான மோக மயர்வு நீங்கிறன் மன மடங்கும். அவ்வமையம், கன்றுறப் பிடிக்குங்காற் பசுவும் பாசத்தாற் பிணிப்புண்டு நின்றாங்கு மனத்தொடு விராய பிராணவாயுவு முள்ளடங்கும்; அஃதந்த இராசயோகமா மென்க. இங்கியம்பப்பட்டவை.

"பகைவர் தவனமாய்த் திடிற்சித்தந்
தோன்று பவன மோரேங்கிவிடிற்
றேகைதீர் துகளந் தரத்துண்டோ
சொன்ன பிராண் னசைவேது
மிகைவா குள்ளத் தசைவதுவே
யதனாற் பிராண விசைத்தடைதான்
றகைசேர் மதிமான் களுக்கியல்பாய்த்
தப்பா தியற்றத் தக்கதுவே."

என்னும் வாசிட்ட உபசாந்திப் பிரகரணச் செய்யுண் மாட்டு முணரக்கிடக்கின்றன. யாதானுமொன்றிற் சித்த மழுந்துதலான்று பிராணவாயு வெளிவருதலின்றி அதனோ டொருங்கு கூடி நிற்றலை மதியுடையார் மயர்விலா தறியு மாற்றானும் இவ்வுண்மை பெறப்படுமால். இந்தயோகம் விழைவோன் — சைவ தவம் இனிது விளங்கச் சுத்த தவளநிற விபூதியினை உத்தூளனமா யணிந்துகொண்டு தேகாவஸ்தைசம நயத்த மலைச்சார்பு, குளிர்ந்த அடவி, நன்னீர்க்கரை, பார்வைக் கினிமையான புடை யென்பன வற்றுள் ஒன்றில், எவ்வித சத்தமுஞ் செவியினுழையாமல், எத்திறக் கடிவாய்ப்பிராணிகளு நண்டாமல், கற்கரடுக ளில்லா இடத்துழிக் கிருட்டிணாசனமேனும் வியாக்கிரா சனமேனும் மிருதுவான வேறொஃதேனும் விரித்துள்ள சமதலத்தில் வடக்குமுகமாக வமர்ந்து, செவ்வேபாமனு கவே மதிக்கத்தக்க தன்னொரு தேசிகன் றிருவடிமலர் "சிந் தித்த பின்னரை முதுகுக்கும் இரண்டு விலாவுக்கும் அணை யேனும் யோகதண்டம் யோகபட்டை யென்பனவற்று ளொஃதேனுஞ்சேர்த்துப் பதுமாசனம் அல்லது (இயைந்த படி கூட்டுஞ்) சுகாசனமாக வுடம்பினைச் செய்து மார்பு, கழுத்து தலையென்னு மூன்றுறுப்புக்களும் மற்றைப் பாகங்கட்கு நேராயிருக்க நிமிர்ந்திருந்து, மனத்துடன் இக்

திரியங்களையும் அசங்கமாய்ச்சேர்த்துச் சற்றே யெண்ணமற்றிருக்கவேண்டும். இது மனோவசிய மெனப்படும்.

இஃதாதலும், மனத்தினை யுள்ளே புகச்செய்தல் வேண்டும். இது பூரகமெனப்படும். பூரிக்கப்பட்டதைத் இதயகமல ஆன்மலிங்கத்தினை நாடி நிற்குமாறு தம்பிக்க வேண்டும். கும்பகத்தில் இஃதுட்கும்பக மெனப்படும். என்னை? வெளிமுகத்தே செல்லுங்காறு மிருக்கத் தக்க நிலையாகலின். பின்னர், மனத்தினை வெளியேசெல்ல விடல்வேண்டும். இஃது இரேசகமெனப்படும். இரேசிக்கப்பட்டதைக் குகனாகிய பரமன்மீது வைத்தல்வேண்டும். இது புறக்கும்பகமெனப்படும். என்னை? பெயர்த்தும் உள்ளே புகுங்காறும் நிற்கத்தக்க நிலையாகலின். இப்புறக் கும்பகத்திலிருக்குஞ் செவ்வி, பாண்டிலி லாடிடு கூத்தன் செய்கையினைப்போலப் பிறகருமங்கள் புரியும் பொருட்டு மனத்தின் ஞாபகத்தை இரு கூறுபடுத் தொரு கூற்றினை அக்கருமங்களினும் மற்றொரு கூற்றினை உட்கும்பகத்துமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

“ விளையேது ஆரியினு மனகலை மறவேல்.”

என ஞானவாக்கியத்தும் யாங் கூறினா மன்றோ. பெயர்த்தும் பெயர்த்துஞ் செய்யப்படும் உட்கும்பகம், இரண்டரைக் கடிகைக்குக் குறையாமே காலை மாலை நாடோறும் பயிலத்தக்கது. இதை யொருவினையே வினைக் கிருப்பதாய மனோலயமும், அகத்தும் புறத்துமின்றி நிருவாத தீபம்போல இனிது சித்திக்குங்காறும் இந்தயோகஞ் சில மாதங்கள் பயிலத் தக்கது. இராப்பகல் சேர்ந்த ஆறுநாள் அறுங் தைலதாரைபோல இடையறாது நிற்கு நிலை யெய்தின் காரியஞ் சித்தியாம். பாவங்கள் பாறும். இறைவன் ஞானசாரியனாக வெளிப்பட்டருளலும் இம்மையேயாம்.

மேல், அவனது கட்டளையின்படி நடப்பதுங் கடப்பாடாமு முன்னங் கூறிப்போந்த இந்த இராசயோகத்திற்குரிய எட்டங்கங்களும் இங்ஙனம் பொருந்துமாறுங் கண்டுகொள்க. ஆண்டே பூசிக்குமொரு பரமனுருவு மறிவுறுக்கப்பட்டதன்றோ. அஃதேனும், அவன் றிருவடியேனும், ஆசிரியன் றிருவுருவேனும் இங்ஙியம்பப்பட்ட ஆன்மலிங்கத்துங் கோடலாம்; விகற்பொன்று மின்று. ஆசிரியனைப் பரமனாகவே நினைக.

பதுமாசன மென்றது, அகப்பாதமிரண்டும் மேன்முகமாய் மலர்ந்திருக்க இருதாள்களையும் படலையாகச் சேர்த்து முழந்தாள்களின் மிசை இரு புறங்கைகளையும் படியச்செய்து விரல்களை விரித்துப் பெருவிர லுனியும் சுட்டுவிர லுனியும் மேனோக்கா யேய்ந்திருக்க நிமிர்ந்திருப்பதாம். கைகளை அடி யகடு பொருந்த வைத்துக் கொளினுங் கொளலாம். இவ்வப்பியாச நிகழ்கையிற் (௧௨) பன்னிரண்டரைக் கடிகை முதல் (௨௫) இருபத்தைந்து கடிகை வரையிலுஞ் சிற்றுறக்கமாய் உறங்கிக் கொள்ளலாம். பல்வேறு வகைப்படு தலைக்கொள்கைகளினின்றும் இந்த யோகஞ் சிறப்புடைத் தென்பதை,

"மதித்த தத்து வமசியென்று
வயவாக் கியத்தின் வாய்மைதன்னை
விதித்த விஞ்சை யார்கோடி
மறையோர் மேலாம் பசுபதிமுன்
துதித்த வோசைச் சிவாகமத்தின்
கருதும் யோகம்முன் றுணர்ந்துயிருட்
பதித்த பரம் சிவனைநுளும்
பார்க்குஞ் சிவயோ கிக்கிணையோ."

எனச் சிவபுண்ணியத் தெளிவினும்

" அரியவிம் மானுட யாக்கை பெற்றவர்
கருமயோ கங்களாற் காலந் தள்ளுவார்
உரியமெய்ஞ் ஞானயோ கத்தி னலரன்
துரியஞா னத்தினைச் சோதி யார்களே."

எனப் பஞ்சாக்ஷரப்பதிபசுபாச விளக்கத்தினும் வரு செய்யுள்களானு மறியலாமன்றோ. இதுவேயுமன்றித் தலைவனையறிதற்கு முன்னர்த் தன்னை யறிதலுந் தன்னை யறிதற்கு முன்னர் ஞானநேத்திரம் பெறலும் வேண்டப் படுதலின், அந்நேத்திரம் பெறுவதும் இந்த யோகவழியி னென வுணரலுங் கொள்ளக்கிடக்கின்றதன்றோ. அகார உகார மகார உச்சாரணத்தோடே இரேசகஞ்செய்து பூர கஞ்செய்து தம்பிக்கும் பிராணபந்தனை அடயோகத்தைத் இங்கே. செய்யவேண்டு மென்பதின்று. ஏதுவெனின்,— பிராண இயக்கத்தினாற் பூரணயோக மனைத்து மனமாய் விளைதலினாலும், மனத்தைப் பந்திக்கிற் பிராணனும் பிராணனைப் பந்திக்கின் மனமு மடங்குதலி னாலுமென்க. இந்த யோகத்தை யினிதுபற்ற வறியாது கருமமனுட்டிப்பார் சிலர், சுட்டுவிரல் நடுவிரல்களை மடக் கிக்கொண்டு வலக்கையைப் பெருவிரலினால் வலமூக்கினைப் பிடிக்குங்கால் வெளிக்காற்றினை இடமூக்கினால் ஒரு முறை உள்ளே வாங்குதலைப் பூரகமென்றும், பெருவிரல் ஆழிவிரல்களினால் வலமூக்கினையும் இடமூக்கினையும் பிடிக்குங்கான்று பூரித்த காற்றினை யொருமுறை யுள்ளே நிறுத்துதலைக் கும்பகமென்றும், ஆழிவிரலினால் இட மூக்கினைப் பிடிக்கும்போது கும்பித்த காற்றினை வல மூக்கினால் ஒருமுறை வெளியேவிடுதலை இரேசகமென் றுஞ் செய்து வாளா நாளைக் கழிப்பர்.

ஆசனத்தி லிருந்து மேலே விளக்கிய போக்கி இராச யோகந் தொடங்குவதற்கு முன் முதலவனது திவ்விய

திருநாமத்தை நூற்றெட்டுருவுறச் செபிக்கலாம். அஃதாசாரியன் உபதேசித்த முறையிலே "சிவாயநம:" எனவும், "சரவணபவாயநம:" எனவுங் கிழுத்தக்கது. முதற்கண் ஓம் என்பது கூட்டியுஞ் செபிக்கலாம். செபமணி ஐந்து முகம் அல்லது ஆறு முகமுள்ள பழுதில்லாத எர்கிற வுருத்திராக்ஷமுமா யிருக்கலாம். அவ்வைந்து முகமும் ஆறுமுகமுங் கலந்து கோத்தமாலை ஆகாது. நூற்றெட்டு மணியேனும் ஐம்பத்துநான்கு மணியேனும் முகத்தோடு முகமும் அடியோடடியும் பொருந்தக் கோக்கப்பட்ட செபமாலையாகும். செபிக்குங்கால், மணிகள் ஒன்றோடொன்றடிபட் டொலிபிறத்தல் கூடாது. செபமும் பிறர் செவியிற் படலொண்ணாது. **துறவி**, விரலிறையைக்கொண்டு உரு எண்ணலாம். அதன்முறை—"வலக்கையின் பெருவிரனுனியால் ஆழிவிரலின் அடியிறைமுதல் நடுவிரலின் அடியிறை யீறாக வலமாய்ச் சுற்றித் தொடுதல் செய்தலி னேற்படுமெண் ஒரு பத்தாகும்; அப்பத்தாந் தோறும் மடக்கியுள்ள இடக்கை விரல்களு ளொவ்வொன்றினை விடல் வேண்டும்; அப்படிப் பப்பத்து ஆக ஏக மற்றீர நான்கு விரல்களையும் விட்டுப் பின்னர் ஐந்து விரல்களையும் ஒரோவொன்றாக மடக்குமாற்றானே நூறு உருக் கண்டுகொளலாம்; நடுவிரல் ஆழிவிரல்களிலுள்ள நடு இறை யிரண்டினையும் விரல்களி னுனிகளையும் பெருவிரனுனி தீண்டொண்ணாது" எனலாம். அந் நடுஇறை யிரண்டுஞ் சிவனுஞ் சத்தியுமென மதிக்கவுள்ளன. பிறர் விழிக்குப் புலப்படாது அச்செபமாலையுஞ் செபவிரலிறைக் கையும் பரிவட்டத்தினுள் மூடப்படல் வேண்டும். எக்காலத்தும் கட்புலத்தே மாணவழகச் செபஞ்செயற்கு உரு வளவும், ஒரு கட்டியும் இல. செபிப்போன் ஞாபகம், ஈசன் திருவடியி லிருத்தல்வேண்டும்.

செவ்வேட்பரமனது திருமேனியாய்த் திருப்பெயரா யிராநின்ற ஓங்காரமும் மானசமாகச் செபிக்கத்தக்கதே யாம். இதன்பொருள் செவ்வேட் பரமனேயென ஞாய கஞ்செய்து செபிக்க வேண்டும். இது சூக்கும சடக்கர மென்றுங் கூறப்படும். அந்தர்முக ஆன்மலிங்காகார பாவ னையில் இவ்வோங்கார வடிவம் பாவிக்கத் தக்கதே. அவ் விலிங்கமும் அவ்வடிவிற்றே. இது, சில வெழுத்துக் களோடிணைத் துபதேசிக்கப்படின், தனியாரு செபத்திற் குரியதன்று. அவ்வாறு செபித்தற்குத் தனியுபதேசமும், ஆசிரிய கட்டளையும்பெறல் சற்சீடர் கடப்பாடாகும். நாடோறும் (கஉ௦௦௦) பன்னீராயிர முறை செபிப்போர்க் குப் (கஉ) பன்னிரு திங்களுட் பரப்பிரமம் பிரசன்னமா மென்று சுருதி சொல்லுகின்றது.

விழிக ளைந்து விளங்கித் தழைப்பான் கதிரவற் றொழல்வேண்டும். அத்தொழல், சூரியோதய மான வுடன் சூரியமண்டலத்தைத் தரிசித்து அதனடுவே செவ் வொளி நிறமுடைச் செவ்வேட்பரமனைப் பாவித்து "ஓம் கடாதித்ய குஹாய நம:" என்று ஆறுருச்செபித்து ஆன் மப்பிரதக்ஷிணஞ் செய்து உடம்பு நிலம்படிய வீழ்ந்து வணங்குதலாம். இங்ஙனம், ஐம்முகச்சிவனை வணங்குவ தாயின் மந்திரம், "ஓம் கடாதித்ய சிவாய நம:" எனவும், உரு ஐந்தெனவு முணர்ந்து கொள்க. இக்கட ஆதித் யன், செவ்வேட் பரமனது பாரமேசுரப் பேருருவில் ஒரு விழியாகத் திகழ்ந்துள்ளான். பரம ரகசிய முணர்ந்தவன், தனது வலக்கண்ணகத்தே இவ்வுபாசனையைச் செய்து கொள்வன்; ஆசிரிய னுத்தரம் பெற்று. மந்திரவுரு ஒன்றேயாம்.

பததாவது

அநுஷ்டானவிதியியல்.

குமாரோபாஸ்தி.

யாதானுமொரு நீர் நிலையிலுள்ள நற்றீர்த்தத்தைப் பரிசுத்த கங்கையாகவுஞ் சரவணப்பொய்கையாகவும் பாவித்து, நாபியளவினதாகிய நீரில் வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்றுகொண்டோ, ஓடுகிற நதியாயின் அதற்கெதிர்முகமாக நின்றுகொண்டோ செவ்வேட்பரமனைச் சிந்தித்து, வலக்கை விரலால் ஓங்காரம் வரைந்து, அதனடியே நின்று, சருவபாவநாசமுஞ் சருவபுண்ணிய விருத்தியு முண்டாமாறு சிந்தித்து, மும்முறை மூழ்கியெழுந்து கரையேறல் வேண்டும். நீர் நிலையில்லாவிடத்தே முழுகனேர்ந்து முழுகுஞான்று இறுதியிலொரு நிறை கலசநிறைய வெடுத்துக்கொள்ளுநீரை நோக்கி—

> கங்கேசயமுநேசைவ கோதாவரீஸரஸ்வதீ ।
> நர்மதேசிந்துகாவேரீ ஜலேஸ்மிந்ஸந்நிதிம்குரு ।
> ஆயாந்து ஸுப்ரஹ்மண்ய பூஜார்த்தம்
> துரிதக்ஷயகாரகா : ॥"

என்று சொல்லி நமஸ்கரித்து, அதன்கண்ணே ஆழிவிரல் கொண்டு சட்கோண யந்திரஞ் செவ்வனே வரைந்து, நடுவில் ஓங்காரமுங் கோணங்களிற் சகாரமுதல் வகாரமீறான ஷடக்கரமு மெழுதி, அம்மந்திரத்தை ஆறுமுறை செபித்து அந்நீரைச் சிரசில் விட்டுக்கொள்ளலாம். மேல், உருலர்ந்த கோவணந் தரித்து கல்லாடையு முடுத்தல் வேண்டும்—

"ஓம் அஸ்த்ராய பட்" என்று சொல்லி இருப்பிடத்திலே நீரைத்தெளித்துப் பூமியைச் சுத்திசெய்து கோடலும், அதன்கண் வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் யோராசனத் தமர்தலும்,

முருகப் பெருமானையே கணபதியாய் நினைந்து "ஓம் கணபதயே நம:" என்று குட்டிக் கோடலும்,

குருவை நினைந்து "..........குருப்யோ நம:" என்று கும்பிடலும்,

அநுஷ்டான நீரை, "ஓம் சிவாய நம" என்று சொல்லி வலக் கண்ணால் உலர்த்தி, நெற்றிக் கண்ணால் எரித்தி, இடக் கண்ணால் அமுதம்பெய்து நினைத்துக் கொண்டதாகப் பாவித்துச் சுத்திசெய்து கோடலும்.

"ஓம் அஸ்த்ராய நம" என்று சொல்லி அந்நீர்த் துளிகள் தன்றலையின்மேல் விழ மும்முறை தெளித்துக் கோடலும்,

"ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா" என்று சொல்லி அந்நீரை மும்முறை தருப்பித்துக் கோடலும், .

"ஓம் அஸ்த்ராய நம" என்று பத்துமுறை செபித்த பின்னர் முன்போலவே "ஓம் அஸ்த்ராய ஸ்வாஹா" என்று ஒரு முறை தருப்பித்துக் கோடலும், மேல் — வலக்கைப்பெருவிரலடியிற்றாங்கிய உழுந்தளவு நீரினை —

"ஆத்மதத்வாய ஸ்வதா"

"வித்யாதத்வாய ஸ்வதா"

"சிவதத்வாய ஸ்வதா"

என்று மும்முறை ஆசமனஞ் செய்தவுடன் "ஓம் அஸ்த்ராய பட்" என்று சொல்லி உதடுகளிரண்டினையும் வலக்கைப் பெருவிரல்கொண்டு இடமாக விருமுறையும், வல அங்கைகொண்டு கீழாக வொருமுறையுந் துடைத்தல்செய்து கை கழுவலும், மேல்—

"ஓம் ஹ்ருதயாய வௌஷட்" என்று வலக்கைப் பெருவிரலோடு சேர்ந்த ஆழிவிரலான் முகம், வலமூக்கு, இடமூக்கு, வலவிழி, இடவிழி, வலச்செவி, இடச்செவி, நாபி, மார்பு, வலத்தோள், இடத்தோள், சென்னியென்னும் பன்னிரு தானங்களையுந் தொட்டுவிடலுங் கருமானுட்டான முறையாரால் விதிக்கப்படுகின்றன.

விபூதிக் கொப்பரையினுள்ள தவளநிற விபூதியினை வலக்கையா னெடுத்து இடக்கையில் வைத்து வலக்கையான் மூடிக்கொண்டு பஞ்சப்பிரம சடங்க மந்திரங்களாய பதினொரு மந்திரத்தினாலும் அபிமந்திரித்து "அஸ்த்ராய பட்" என்று உத்தூளனமாகப் பூசிக்கொள்ளவேண்டும். திரிபுண்டரமாக இடவேண்டுமாயின்—

"ஈசான மூர்த்நே நம:" என்று சென்னியிலும்,
"தத்புருஷ வக்த்ராய நம:" என்று நெற்றியிலும்,
"அகோர ஹ்ருதயாய நம:" என்று நெஞ்சிலும்,
"வாமதேவ குஹ்யாய நம:" என்று நாபியிலும்,
"ஸத்யோஜாத கவசாய நம:" என்று இருதோள், இருகரம், இருமணிக்கட்டு, இருவிலா, முதுகு, கழுத்து என்னு மிடங்களிலிட்டு "அஸ்த்ராய பட்" என்று கை கழுவுக. அங்ஙனமாயிடப்பட்ட அப்புண்டர இடைவெளிகள் ஒவ்வோரங்குல அளவினவாக விருத்தலே நலமென்ன

எண்ணப்படுகிறது. துறவிக்கு உத்தூளனமாகப் பூசுதலே முக்கியமாம். மேல் —

(அங்கந்யாஸம்)

"ஓம் அஸ்ய ஸ்ரீஸுப்ரஹ்மண்ய மஹாமந்த்ரஸ்ய த்ரிபுராந்தக ருஷி: அநுஷ்டுப் சந்த: ஸுப்ரஹ்மண்யோ தேவதா போகமோக்ஷார்த்தே ஜபே விநியோக:"

எனவொருமுறை சொல்லி உச்சரிக்க வேண்டும். சொல்லுஞ் செவ்வி, வலக்கை தலையைந் தொட்டுக் கொண்டும், இடக்கை வலக்கையைத் தொட்டுக்கொண்டும் எழிலா யிருத்தல் வேண்டும். மேல் —

(௧) ஓம் ஸ்கந்தாய அங்குஷ்டாப்யாம் நம:
(௨) ஓம் கார்த்திகேயாய தர்ஜநீப்யாம் நம:
(௩) ஓம் ஸுப்ரஹ்மண்யாய மத்யமாப்யாம் நம:
(௪) ஓம் ஸேநாந்யை அநாமிகாப்யாம் நம:
(௫) ஓம் குஹாய கநிஷ்டிகாப்யாம் நம:
(௬) ஓம் ஷடாநநாய கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
(௭) ஓம் ஸம் ஹ்ருதயாய நம:
(௮) ஓம் ரம் சிரஸே ஸ்வாஹா
(௯) ஓம் வம் சிகாயை வஷட்
(௧௦) ஓம் ணம் கவசாய ஹும்
(௧௧) ஓம் பம் நேத்ரத்ரயாய வௌஷட்
(௧௨) ஓம் வம் அஸ்த்ராய பட்

என அந்த அந்த இடங்களைத் தொட்டுவிட்டுப் "பூர்புவஸ் ஸுவரோம் இதி திக்பந்த:" என்று சொல்லவேண்டும். மேல், 'த்யானம்' என்று சொல்லிக்கொண்டு—

(தியானம்)

" ஸிந்தூராருணமிந்து காந்திவதனம்
கேயூரஹாராதிபிர்
திவ்யைராபரணைர்விபூஷிததனும்
ஸ்வர்க்காதிஸௌக்யப்ரதம் |
அம்போஜாபயசக்தி குக்குடதரம்
ரக்தாங்கராகாம்சுகம்
ஸுப்ரஹ்மண்யமுபாஸ்மஹே ப்ரணமதாம்
பீதிப்ரணாசோத்யதம் ||"

" கரத்தி லமர்வேலுஞ் சுட்டழகார்
மொய்ம்பிலணி கடம்பு மாறு
சிரத்தி லவிர்முடியுந் தேசுசேர்
காதணியுந் திகழ மீரகில்
உரத்தி லணிபுரள வொளிர்தேவி
யிருவரோடு
வரத்தை யருள்குகனோர் வரினெற்குங்
கருக்கட்டு வருவ துண்டோ." — [திருவலங்கற்
றிரட்டு - ஆசிரியத்துறை]

என்று சொல்லித் திருவுருவைத் தியானித்து நமஸ்கார முத்திரையிற் கும்பிடல்வேண்டும். மேல், ஒன்பதாவது இயலிற் சகார முதலாகக் கூறியுள்ள திருநாம **சடக்கர மகாமந்திரத்தை** நூற்றெட்டுரு நன்கு செபித்தல் வேண்டும்.

சோடசோப சாரம்.

பூசிக்கத்தக்க யந்திரந்தனில் ஸ்ரீ ஸ்ரீ வல்லீ தேவ ஸேநாம்பா ஸமேதம் அகண்டக்ஞாந சிவஸுப்ரஹ்மண்

யங் ஆவாஹயாமி" என்று தேவிகளோடு மமர்ந்துள்ள ஸ்ரீ குமார பிரானை ஆவாகனஞ் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்துகொண்ட பின்னர் —

(௧) ஆஸநம் ஸமர்ப்பயாமி (தவிசளித்தல்).
(௨) பாத்யம் ஸமர்ப்பயாமி (கால் கழுவ நீருதவல்)
(௩) அர்க்யம் ஸமர்ப்பயாமி (கை கழுவ நீருதவல்)
(௪) ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (ஆசமன நீருதவல்)
(௫) சுத்தோதகஸ்நாநம் ஸமர்ப்பயாமி (அபிஷேகம்)
ஸ்நாநாந்தரம் - ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

(௬) வஸ்த்ரயுக்மம் ஸமர்ப்பயாமி
(௭) உபவீதம் ஸமர்ப்பயாமி
} அக்ஷதையாற் செய்யலாம்.

(௮) கந்தாந் தாரயாமி (சந்தனம்)
(௯) புஷ்பாணி பூஜயாமி (பூக்கள், அக்ஷதை)

(௧௦) தூபம் ஸமர்ப்பயாமி
(௧௧) தீபம் ஸமர்ப்பயாமி (தர்சயாமி)
} (பூம்போதை வலமாகச் சுற்றற் குரியன.

(௧௨) நைவேத்யம் நிவேதயாமி
நைவேத்யாந்தரம் - அர்க்யம் ஸமர்ப்பயாமி, பாத்யம் ஸமர்ப்பயாமி, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி, தாம்பூலம் ஸமர்ப்பயாமி

(௧௩) கர்ப்பூர நீராஜநம் ஸமர்ப்பயாமி [மந்திர புஷ்பமும்]
சாமரம் ஸமர்ப்பயாமி
ஆலவட்டம் ஸமர்ப்பயாமி
சத்ரம் ஸமர்ப்பயாமி (குடை)
தர்ப்பணம் தர்சயாமி (கண்ணாடி
ஸ்தோத்ரம் ஸமர்ப்பயாமி

தனஞ் செய்து அவ்விரண்டனையும் ஈசுவரார்ப்பணம் பண்ணி யிடல்வேண்டும். அவர் நல்கு பொருள்களும் அங்ஙனமே ஆகத்தக்கன. இந்நெறியோனாகிய தான், அவ் வண்ணஞ் செய்யாவிடில் அன்னோர் பாவமும், அப் பொருள்களின் வழியாய் ஏதேனும் வருபாவமுந் தன்னைச் சாரும்; தனது புண்ணியமும் அவரைச்சாரும். இருளுள்ள இடத்தில் உணவுகொள்ளொண்ணாது. தீபமவி யின், அஃதேற்றப்பட்டு வருங்காறும் ஸ்ரீசடக்ஷரத்தை மானசமாகச் செபித்துக்கொண்டிருந்து அத்தீபங் கண் ணுற்றவுடன் எஞ்சிய வுணவையும் புசிக்கலாம். இராப் புசிப்புண்டல் ௩௪-கடிகைக்குட்படின் நன்மை பயக்கும். உறக்கத் தொடக்குமான்று—

"திருமா லயனெண் டிசைச்சின் றுளதுஞ்
செருவா னவருஞ் சிவசங் கரனுர்
உருவென் றுணர்வோ ரறிவா லேயானிரும்
ஒருகந் தபிரா னுயிர்கா யகனே." [௩-பாடல்]

என்னும் இத்திருச்செய்யுளை யொருமுறை சொல்லிக் குமாரபிரான் றிருவடியைப் பாவனையால் இதய கமலத் திருத்திக்கொண்டு இடக்கை கீழாகப்படுத்துக் கண்படை கொள்ளவேண்டும். இடக்கை கீழாகப்படுத்தலினுற் பிராண வாயு இனிதியங்கும். மாகேசுரரைப்பூசித்து அவர்கட்குத் திருவமுது செய்வித்தபின் உண்ணவிழைப்போன், சிவ சின்ன தாரணர்களான அவர்களுடைய திருவடிகள் விளக் குந் தன்மையாலே திவ்வியதீர்த்தமா யேற்பட்ட நீரினைத் தன்றலைமேற் றெளித்துக்கொண்ட பின்னர் முன்ன ரேயே சாணியினுல் மெழுகப்பட்டுக் காய்ந்துள்ள இடத் தில் அவர்களை வைத்தப்படி செய்யக்கடவன். இரவிற் சாணி சுத்தமிலதாகலின் அக்காலத்தே அஃதுபயோகித்

தல் கூடாது. மாகேசுரர் புசித்தவிடத்திற் சாணியிடலுங் கூடாது. சுரை, முருங்கை, கொம்மடி, அத்தி இவற்றின் காய்களும், வெள்ளுள்ளி, பெருங்காயமென்பனவும் மாகே சுர ருண்ணுமுணவிற் சேர்த்தல் தகாதற்குரியன. அவர் களைக் குமாரக் கடவுளாகவே பாவித்து நடப்பதூஉம் அப்பூசை புரிவோன் கடனாம். இங்ஙனந் திகழ்பூசையினை அம் மாகே சுரரும் அக்கடவுட்கே சமர்ப்பித்தல் நலமாம்.

நெருப்பையேனுஞ் சாம்பலையேனும் ஒருகாலும் மிதித்தல் கூடாது; கடிக்கலுங் கூடாது. இவற்றை யபசாரஞ் செய்தக்கால், தீங்குசேரும். பிராக் குறையப இல்லையேல் ஆசிரியனது திருமுன்னே உறுதிமொழி கூறி, இரகசியமாய்ப் போதிக்கப்பெற்ற மந்திரத்தினை முறையின்றி வெளியிடுதல் தீங்குபயக்கும் : கேடுமெய்தும். யாதானுமொரு ஆசநத்தின்மேல் கையிரண்டுங் காலிரண்டுங் கழீஇ ஆசமனமுஞ் செய்தலென்னும் பஞ்ச சுத்தி செய்துகொண்டு திருநீற்றினை யெடுத்துச் 'சிவ சிவ' என நெற்றியிற் பூசிக்கொள்ளலையும் உட்கொள் ளலையும் புரியிற் சுகமுண்டாம். இங்ஙனம், மந்திர ராஜ மாகிய அட்சரத்தை ஆறுமுறை செபித்தலுமாம்.

எனக்கொரு செயலுமின்று யாண்டுஞ் சிவன்செயலே யென்று அது பாவித்து அதன்கண்ணே தான் மௌனியா யடங்கின் ஏழும் ஆன்மசுத்தியென மதிக் கப்படுகிறது. இத்திறமுடையானே உள்ளும் புறம்பும் பூசினை புரிய யோக்கியனாவன் ; ஐயமின்று. ஆசிரியன், அத்துவா சுத்தியெனப் பாவனையாற் செய்வனவற்று ளொன்றும் இவனுக்கு வேண்டியதின்று.

(க) ஓம் ஸம் ஸத்யோஜாதாய நம
(உ) ஓம் ஹிம் வாமதேவாய நம:

(௩) ஓம் ஸூம் அகோராய நம:
(௪) ஓம் ஸேம் தத்புருஷாய நம:
(௫) ஓம் ஸோம் ஈசாநாய நம:, என்னும் இவ்வைந்தினையும் **பஞ்சப்பிரமபீச** மென்றும்,

(௧) ஓம் ஸாம் ஹ்ருதயாய நம:
(௨) ஓம் ஸீம் சிரஸே ஸ்வாஹா
(௩) ஓம் ஸூம் சிகாயை வஷட்
(௪) ஓம் ஸைம் கவசாய ஹூம்
(௫) ஓம் ஸௌம் நேத்ரத்ரயாய் வௌஷட்
(௬) ஓம் ஸ: அஸ்த்ராய பட் என்னும் இவ்வாறனையுஞ் **சடங்கமந்திர** மென்றும்,

(௧) ஓம் ஸூம் ஸுப்ரஹ்மண்யாய நம:
(௨) ஓம் கும் குமாராய நம:
(௩) ஓம் ஹம் ஹரஸூநவே நம:
(௪) ஓம் ஸூம் ஸூராக்ரஜாய நம:
(௫) ஓம் ஸேம் ஸேநாபதயே நம:
(௬) ஓம் ஸூம் ஸூரேச்வராய நம: என்னும் இந்த ஆறனையுஞ் **சண்மூர்த்திமந்திர** மென்றும்,

(𑌓𑌂 𑌸𑍍𑌰𑍂𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌾𑌯 𑌨𑌮𑌃)

“ஓம் ஸ்ரூம் ஸ்கந்தாய நம:” என்னும் இவ்வொன்றனைமட்டும் **மூலமந்திர** மென்றும்,

(𑌓𑌂 𑌶𑌰𑌵𑌣𑌭𑌵 𑌹𑍍𑌰𑍀𑌂)

“ஓம் சரவணபவ ஹ்ரீம்” என்னும் இதனைச் (ஷடக்ஷரம்), **சடக்கர** மென்றும் **குமாரதந்திர**மென்னும் ஆகமங் கூறுகின்றது. இவற்றுள் ஆன்றோர் செபித்தலில்,

ஓம்

ஞானகுருப்யோ நம:

முன்னுரை.

உலகெங்கும் பிரகாசிக்கின்ற சூரியனை அந்தகன் காணாது நிற்றல்போல, (பிரமான்ம சொரூபமாய் எங்கும் நிறைந்திருக்கின்ற) கடவுளை அஞ்ஞானியாகிய அந்தகனுங் காணாது நிற்கின்றனன். அவனுக்குள்ள ஊனவிழியானது, உருவ ஜடப்பொருள்களையே நோக்கும். நோக்குமவிடத்தும் இருட்டறையில் யாதொன்றனையு நோக்காது. இக்கீரமை விழியினையுடைய மக்களையுட் சிலர், அந்த அசேர்சர பாவத்துவால் கடவுளைக் காணுமையால் அக்கினிசேவைக்குச் சுழற்சிற்குகராகின்றார். அவர்க்கும் அதனுறிந்த கிடைப்பார்க்குமுள்ள பாச இருளை யொழிப்பது சிவஞானதீப மொன்றே யாகும். அத்தீபமாகிய ஞானவொளியினால் பெறுந் தேற்புடைச் சாதனமெல்லாம், விளக்கிவிடலின் இந்நூல், சிவஞானதீபமெனக் காரணப் பெயர்த் தாயிற்று. இது, பாயிரத்தே "இந்நூல் [illegible] சிவஞானதீபம்" எனச் சுருங்கச் சொல்லப் பட்டதுமாம். இந்நூல், கலியுகம் சகசகா - [illegible] [illegible] ஆண்டிலே இயற்றிச் சமர்ப்பணத்து கி. பி. 1894 - ல் வெளியிடப்பட்டதுமாம். இந்நூலை

நேர்பட்ட பொருள்விசாரணைக்கும் அநுபவத்திற்கு மியைய இஞ்ஞான்றெம்மாற் றிருத்தப்படுவன திருத்தியுங் கழிக்கப்படுவன கழித்துஞ் சேர்க்கப் படுவன சேர்த்தும் புதுக்கப்பட்ட இந்நூல், வேதாந்த சித்தாந்த சமரச சுபமாய்ப் பரானந்தா சாரியர் பக்குவமுடைய சீடனுக்கு இரகசியமாய் உரைத்தருள் சிவஞான இராஜயோகத்தையுங் கூறு கின்றது; கூறுதலின், எவருமெளிதி னுணர்ந்து கொள்ளுமாறு வசனரூபமாயு மிருக்கின்றதாகலின் இதனை, நன்கு மதித்துப் பரமபத்திமையாளரா யமர்குவார் பலர்க்கும் போதிப்பது, எமது பரி வின்மிக்க மஹாதேஜோ மண்டலத்தார்க்குங் கடன்மையேயாம்.

இந் நூலான் எடுத்துக்காட்டிய பாக்களுள்ள செய்யுள்களுள், எம்முடையன அல்லாத மற்றெல் லாம் ஏற்புடைமை கருதிக் காட்டப்பட்டனவாம். அவற்றைத் தஞ்சொனவே, அந்நூல்களுட் கூறப்பட் டனவெல்லாம், எம்மால் அங்கீகரிக்கப்பட்டன வென்றுந் துணிபு கோடல் கூடாது. என்னை? சிட்டசிட்ட விபாயமாக இவையனுகோடலே பெருமது நுகுமில்லது துணிபாகலின். உண்மைத் துறவுநர் செல்வர்கள், உபோகோபகாரமாகச் செய்த நூல் களுட் பெரும்பாலும் புத்துரு வாவனவே, இன்னோர் செய்தது வேறுமாறு கூறி இல்லைத் திருப்பார்சாதும் அறிவின்போது காணப்படுவ

புத்தகவிஷயவறிவிப்பு.

ரூ. அ.

(1) பத்து இலக்கணங்களுள்ள இரத்நாவளிய சிவஞானதீபம். 0 8

இதனைப் பத்துப்பிரதி பெறுவோர்க்கு ஒரு பிரதி விலையின்றியளிக்கப்படும்.

(2) திருப்பா முதலும், அதனுரையாகிய திட்பமும் குறிப்புகளாயும். சிவஞானதீபம் படித்த பின்னர்ப் படித்துணர்தற்குரிய நூல். இரண்டு புத்தகமாக வுயர்ந்த கடுதாசியில் அழகாக அச்சிடப்பட்டது. சங்கிரகமான பட்டங்களோடுள்ளது. வடமொழி தென்மொழி மகாநூலாகிய 235-நூல்களின் மேற்கோள்களைக்கொண்டு தமிழ் அர்ச்சு புத்தகமேபோல் அனுபவ நூலாயிலகுவது. பார்வதி பதி யாவனென்பதும், முருகப்பெருமான் யாவனென்பதும் விசாரணை செய்யமாலெல்லாம் விளக்குவதும் அவர்களுடைய மாண்பினை யெடுத்தெடுத்து வழங்குவது. செந்தமிழிலக்கணப் பெரும்போழை யாயுள்ளது. சைவசித்தாந்தம் படித்து விட்டோமென இறுமாந்திருப்பாரும் இவ்வரிய பெரிய நூலினைப் படித்துணர்வாராயின் மைந்திட சைவசித்தாந்தமென்றுணர்ந்தவராக நாட்டமெனை நூறுதி, உயர்ந்த கைப்பட்டு செய்யப்பட்டுள்ள 2-புத்தகமும். 10 0

(3) பரிபூரணானந்தபோதமும், அதனுரையாகிய சிவஞானசித்தியப்பிரகாசமும், சந்தேடன் கட்

புருஷர் சற்குரு விளக்கமிருந்த தொட்டங்கள் பன்றத்திருப்பக்கத்துப் 18 - கட்டுரிகளைப் பரிபசபாசி யதார்த்த விளக்கப்படலம், குருவுருவினைக்கப்படலமென்றும் இரண்டனுள் அடங்கிக்கொண்டு விளக்கு மோதிய பெரிய சித்தாந்த நூல், வடமொழி தென்மொழி மறைமுதலிய 171 - நூல்களின் மேற்கோளாகக் கொண்டு நிரூபித்தளிக்கப்பட்டுமெடு வெளிவந்தது. குருசிட்டலக்ஷண ஆட்டோண்டிலைச் படித்தோர் புகல்வது. 2

(4) ஸ்ரீமத் - குமாரகுருபர சுவாமிகளாது கூத்தாக்களைத் நிர்ணயம். தெளிவினும் தெளிவாகப் பிரமாணங்களோடு மிளிர்வது. பதிப்பு ஆறுக்குத் போதகர்கள் படிப்போர், இதனைப்பெரிதும் அவாவிப் படித்துணரவேண்டும் தமிழ் வசனம். ரூபா. 0

(5) கந்தர் திவசத் நிர்ணயமும் 5 - ஆம் முகத்தோருக்குள்ள தாதும் நன்றாகச் சாஸ்திர வைகல் செய்யப்பட்டது. 2

(6) தகராலயாரகசியமும், அநுஷ்டானாதிய சதானந்த சாகரமும். தகராலயத்தையின் விளக்கு கிரவில், இரண்டு காண்டங்களும் பாலிரமுமாயுள்ள இந்நூல், வடமொழி தென்மொழி மறைமுதலிய 150 - நூல்களின் மேற்கோள்களைக்கொண்டு முடிவுருத்த வைக்கிறது முன்னது. இதம்பரனைச் வையும், சிவகாமியைப் பெருமான் பெருமையும் நிரூபிக்கிறது தனைவைத்து. நலம் வாசிக்கவேண்டும். 2

ரூ. அ.

(7) மேலேபோந்த 3, 4, 6 -ஆம் இலக்கங்களிலுள்ள நான் மூன்றும் ஒன்றாகச் சாலிகோ பைண்டு செய்யப்பட்டது. 4 0

(8) சிவயோகநெறிவிளக்க முறை மூலமும். "சிவயோகமோ செய்வேனென்றது" "புலைநானென்றென்றது" என்றும் [illegible] திருமங்கை [illegible] பிரசங்கங்களும் [illegible] இதிலே [illegible] [illegible] செய்யும் முறைநான்கும் [illegible] இதன் [illegible] கற்றுக்கொள்ளலாம். இரண்டாம் பதிப்பு. 0 11

(9) வேதவியாசம். [illegible] பொருளுடைமையை [illegible] விரும்புவார், இதனைப் படித்தல் வேண்டும். [illegible] 0 10

(10) பக்திப்பிரபந்தம். சங்கிரகம், [illegible] [illegible] சித்திர [illegible] சித்திர [illegible] [illegible] [illegible] படிக்கும் [illegible] [illegible] 0 7

(11) மேலேபோந்த 8, 9, 10 -ஆம் இலக்கங்களிலுள்ள நான் மூன்றும் ஒன்றாகக் கட்டப்பட்டது. 1 6

(12) திருவலங்கற்றிரட்டு முதற்காண்டம். ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானைப் பாடித் துதிக்கத் தக்க பண்பாடல். காகிதம் [illegible]. 0 6

(13) திருவலங்கற்றிரட்டு இரண்டாங் காண்டம் [illegible] முருகவேள் தோத்திரமாயுள்ள இது, [illegible]

சாத்திரம், யாப்பிலக்கண இலக்கிய முதலியன வாயுள்ளது. பல்சந்தப் பரிமளமெனும் பெயர்த்து மாகலின், தமிழ்கற்போரெல்லாங் கண்ணுறற்பாற் று. காகிதம் கிளேஸ். 0 11

(14) அமைதி வைப்பதென்னுஞ் சேந்தன் செந்தமிழ். வடசொற் புகாது பாடப் பட்டது. இது செந்தமிழ், இது வடமொழியென அறி தற்குரிய எடுத்துக்காட்டு, இதனால் விளங்கு கின்றது. 0

(15) கனை … காரம். பத்துவகைக் கனைவகைய யும், அருவி … யம் கால மென்பனவற்றையு மெடுத்துக் கூறும். 0

(16) குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி. படிக்குந்தோறுந் தேன் வீசா வாசப் பக்திரசம் இனிது பெருகும். இரண்டாம் பதிப்பு. 0

(17) சண்முக சகச்சிர நாமார்ச்சனை. புராணத்துள்ள பலபிரதிகள் கொண்டு உற்ற வழு வெல்லா மொழித்து இனிது வரையப்பட்டது. தமிழெழுத்து. 0 4

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிக சைவசித் தாந்த ஞானபாநு, பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளால் அருளிச்செய்யப்பட் டச்சிடப்பட்ட மேலே போந்த நூல்கள் சென்னை: திருவல்லிக்கேணி, பெரிய சாலை முதலித்தெரு, 135 - ஆம் கதவிலக்கமுடைய வீட் டில் ... - ஸ்ரீ V. [illegible] முதலியாரிடத்திற் கிடைக்கும்.